வள்ளுவர்

இலக்கியத் திரட்டு

நான்காம் படிவம்

பொதுப் பகுதி

தொகுப்பாசிரியர்
வித்துவான் - நா. சு. தியாகராசன்
தமிழாசிரியர்
ஹிந்து உயர்நிலைப்பள்ளி, சென்னை

வெளியிட்டோர்:
வசந்தம் பப்ளிஷர்ஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை 5

பதிப்புரிமை]

[விலை ரூ. 1—4—0

முதற் பதிப்பு, நவம்பர் 1953

[சென்னை அரசியலாரால் வெளியிடப்பட்டுள்ள
புதிய பாடத்திட்டத்தின்படி தொகுக்கப்பட்டுள்ளது.]

Printed at the Liberty Press, Madras 1

முன்னுரை

வள்ளுவர் இலக்கியத் திரட்டு என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் நான்காம் படிவம்—பொதுப் பகுதிக்கு உரியது. இது சென்னை அரசியலாரின் கல்வித்துறையினர் அண்மையில் வெளியிட்ட தமிழ்ப் பாட இயலைத் தழுவித் தொகுக்கப்பட்டுள்ளது.

செய்யுள்: செய்யுட்பகுதி 400 வரிகளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் என்பது புதிய பாடத்திட்டத்தின் விதியாகும். ஆசிரியர்கள் தமது விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், ஓய்வு நேரத்தில் மாணவர் தாமே படித்துப் பயன் பெறவும் இப்புத்தகத்தில் ஏறக்குறைய 500 வரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் குறிப்பும் அரும்பதவுரையும் இறுதியில் தனித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

உரைநடை: இலக்கியம் விஞ்ஞானம் நாடகம் முதலிய பல துறைகளைச் சார்ந்த கட்டுரைகள் பாடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கும் பயிற்சி வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலுள் தத்தம் பாடல்களையும் கட்டுரைகளையும் சேர்த்துக் கொள்ள இசைவு தந்தருளிய பேரறிஞர்களுக்கும், உரிமையாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியது.

இதனை நன்முறையில் வெளியிட்டு உதவிய "வலந்தம் பப்ளிஷர்ஸ்" உரிமையாளருக்கு எனது நன்றியறிதலைச் செலுத்துகின்றேன். தமிழ்மொழிப் பற்றுடைய யாவரும் இந்நூலினை ஏற்று ஆதரவளிக்குமாறு வேண்டுகின்றேன்.

சென்னை 5
15-10-'53

ந. சு. தியாகராசன்.

உரைநடை

எண்	பொருள்		பக்கம்
1.	நம் பண்டைய நீதி நூலாசிரியர் மகா மகோபாத்தியாய, பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார்	....	21
2.	இருவர் சாட்சி திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.,	....	26
3.	சிற்பக் கலையழகு திருமதி ஆர். எஸ். உருக்குமணி அம்மையார், எம். ஏ.	....	31
4.	சர். சி. வி. இராமன் ஒளி திரு. ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ. அவர்கள்	....	38
5.	காரைக்குடி ரசாயன ஆராய்ச்சி நிலையம் இந்திய அரசாங்கச் செய்தி அறிவிப்பு இலாகா, சென்னைக் கிளை.	....	43
6.	குடிசைக் கைத்தொழில்கள் திரு. சர். அமிர்தலிங்கனார் அவர்கள்	....	47
7.	தமிழர் கடலாட்சி கனம் சக்கரவர்த்தி, இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்	....	51
8.	பொருநர் ஆற்றுப்படை வித்துவான் R. விசுவநாதன் எம். ஏ., B.O.L.	....	57
9.	செஸ்டர் பீல்டின் கடிதங்கள் திரு. கா. அப்பாதுரைப் பிள்ளை, M.A., L.T.	....	63
10.	கருணை (நாடகம்) திரு. எஸ். குருசாமி அவர்கள், பி.ஏ., எல்.டி.	....	67
11.	அமெரிக்கப் பிரயாணம் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், பி.ஏ., பி.எல்., டி. லிட்.	....	73
12.	தேசிய மாணவர் படை இந்திய அரசாங்கச் செய்தி அறிவிப்பு இலாகா, சென்னைக் கிளை.	....	78
	குறிப்புரை	....	83

வள்ளுவர்

இலக்கியத் திரட்டு

நான்காம் படிவம்: பொது

செய்யுள்

I. வாழ்த்துப் பகுதி

1. தாயுமானவர் பாடல்

பரம்பொருள்

1. *அரும்பொனே! மணியே! என் அன்பே! என் அன்பான*
அறிவே! அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே! என்றென்று பாடினேன்;
ஆடினேன்; நாடி நாடி,
விரும்பியே கூவினேன்; உலறினேன்; அலறினேன்;
மெய்சிலிர்த் திருகை கூப்பி,
விண்மாரி எனவிரு கண்மாரி பெய்யவே
வேசற்றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனாகிலும் உன்னை
இடைவிட்டு நின்ற துண்டோ?
என்றுநீ அன்றுநான், உன்னடிமை அல்லனோ?
யாதேனும் அறியா வெறும்
துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வமே! பரஞ்
சோதியே! சுகவாரியே!

—*தாயுமான அடிகள்.*

2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

திருமாலை

1. பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ யிந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடி யாழ்வார்.

3. மகம்மது நபி

1. அரபிய நாட்டில் தோன்றி ஆண்டவன் ஒருவன் என்
மரபினை வாழச்செய்த மகம்மது நபியே போற்றி [னும்
தரையினில் பொதுமை மல்கிச் சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த கருணையே போற்றி போற்றி.

—திரு. வி. கலியாண சுந்தரனர்.

4. கிறிஸ்து வணக்கம்

1. தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை ; ஆதலால்
இருமையும் துணையெனக்(கு) இயேசு நாமமே.

—ஏ. கிருஷ்ண பிள்ளை.

II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

காலமறிதல்

1. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2. பருவத்தோ டொட்ட வொழுக லிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

3. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

4. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

5. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

6. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

7. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

8. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

9. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

பொச்சாவாமை

1. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு

2. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

3. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு.

4. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

5. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

6. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்.

7. அரியவென் றாகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

9. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

10. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

—திருவள்ளுவர்.

2. நாலடியார்

1. வைப்புழிக் கோட்படா ; வாய்த்தீயின் கேடில்லை ;
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார் ;
எச்சமென ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை ; மற்(று) அல்ல பிற.

2. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் ;
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

3. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மென்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

4. கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னொண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

—சமண முனிவர்.

3. புறநானூறு

1. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ;
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

'மூத்தோன் வருக' என்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே.

-ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்.

4. நீதிநெறி விளக்கம்

செழுங்கிளை தாங்குதல்

1. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

மான மிழத்தல்

2. தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்றித் தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

அமைச்சு

3. செவிசுடச் சென்றாங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் போரா—கவிழ்மதத்த
கைம்மா வயத்தவே பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே யமைச்சு.

மேன்மக்கள் பெருமை

4. வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்—மாத்தகைய
அந்தப் புரத்தது பூனை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு.

—குமரகுருபர சுவாமிகள்.

III. கதைப் பகுதி

1. நளவெண்பா

1. காமர் கயல்புரளக் காவி முகை நெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப் பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு.

2. ஓத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு.

நளன் சோலைக்குச் செல்லுதல்

3. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

அன்னம் வெளிப்படல்

4. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிறப்ப—மாணிறத்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும் [தான்
அன்னப்புள் தோன்றிற்றே யாங்கு.

5. பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து.

6. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

7. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்

மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

8. அஞ்சல் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

9. செய்ய கமலத்திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா அரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

10. எழுவடுதோண் மன்னா இலங்கிழையோர் தூண்ட
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடை விதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

11. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

12. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ் சேர்ந் தாங்கதனை
யென்னாடல் சொல்லென்றா ளீங்கு.

13. செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு.

14. அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேல் தேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.

15. வாவி யுறையும் மடவனமே யென்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியால்-காவினிடைத்[ரைத்தாள்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தியென்று
பார்வேந்தன் பாவை பதைத்து

16. கொற்றவன்ற னேவலினாற் போயக் குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவள்தா னுற்றதுவும்—முற்றும்
மொழிந்ததே யன்னம் மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு.

நளன் சுயம்வரத்திற்கு வருதல்

17. சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழு நகர்.

தமயந்தி சுயம்வரமண்டபம் வருதல்

18. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே [றத்துச்
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னி
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

19. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

நளனுருவத்துடனிருந்த தேவர்களைக்கண்டு தமயந்தி ஐயுறல்

20. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரை காணாகின்
றாசலா டுற்றா ளுளம்.

தமயந்தி தெய்வத்தை வேண்டல்

21. மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—யன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

தமயந்தி நளனை அறிதல்

22. கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ணமலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளனென்றன்னை யாங்கு.

தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

23. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங்களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

—புகழேந்திப் புலவர்.

2. குசேலோபாக்கியானம்

கடைகாப்பாளர் குசேலரது வருகையைக் கண்ணனுக்குத் தெரிவித்தல்

1. மாமறைத் தலைவ போற்றி
மதிக்குல விளக்கே போற்றி
காமரிந் திரன்மு னானோர்
காண்பதற் கரியாய் போற்றி
தாமரைக் கண்ணா போற்றி
தரியல ரேறே போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த
துவாரகைக் கிறைவ போற்றி.

2. ஆதிரா லயில் கின்னோ
டருங்கலை கற்று ளானும்
போதவுஞ் சிறந்த கட்டுப்
பூண்டுகொண் டவனுங் கந்தை
மேதகக் கொண்ட நீரான்
மெய்ம்மறை யவர்கு லத்தான்
கோதறு குணத்தின் மிக்கான்
குசேலனென் றியம்பினன் பேர்.

3. வற்றியென் பெழுந்த யாக்கை
மாதவன் நின்மேல் வைத்த
பற்றினை யெம்மனோரோ பகுத்தறிந்
தளக்க வல்லார்
இற்றைநாள் வந்து வாயி
லிருக்கின்றான் எதிர்ந்த போரில்
வெற்றிகொள் கழற்கால் வேந்தே
விண்ணப்ப மிதுவே யென்றார்.

குசேலரை அழைத்துவருமாறு கண்ணன் கூறுதல்

4. என்றலு முவகை விம்ம
எழில்முக மலர்ச்சி காட்டப்
பொன்றலில் கருணை பொங்கிப்
பொழிதர விரைவி னிற்சென்று
இன்றுநம் வாயில் வந்த
இருந்தவத் தலைவன் தன்னை
மன்றவிங் கழைப்பீ ரென்று
வாய்மலர்ந் தருளினானே.

கடைகாப்பாளர் குசேலரிடங் கூறுதல்

5. நின்னுடை வரவு ரைத்தேம்
நிருபனுக் கப்போழ் தற்ற
பன்னருங் களிப்பை யாமோ
பகர்ந்திட வல்லம் ஐய
முன்னமங் கிருந்த இன்பம்
முழுவது மறந்து நின்றான்
நன்னர்நெஞ் சுடைய நீரார்
நட்பினிற் சிறந்த துண்டோ.

6. தாயது வருகை கேட்ட
தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி
நெ[illegible]னுள் உவகை பூப்பப்

போயழைத் திடுமின் னின்னே
போயழைத் திடுமி னின்னே
போயழைத் திடுமி னின்னே
யெனவிரை பொருளிற் சொற்றான்.

குசேலர் கண்ணனைக் காண்டல்

7. வருந்துமோர் மிடியன் சேம
வைப்பெதிர் கண்டாற் போலும்
அருந்துண விழந்தோன் விண்ணோர்
அமுதெதிர் கண்டாற் போலும்
பரிந்துவெப் புழலு வோன்கற்
பகமெதிர் கண்டாற் போலுஞ்
சரிந்தபற் றினன்மெய் யாசான்
தனையெதிர் கண்டாற் போலும்.

8. எண்ணனைக் கிலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிட முறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்குங்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

கண்ணன் குசேலரை வரவேற்றுப் பாராட்டல்

9. மன்னுடைய மறையனைத்தும்
வகுத்துணர்ந்த மாதவனே!
உன்னுடைய தரிசனத்தால்
உடம்புபூ ரித்தனன் யான்
மின்னுடைய விளங்கொளிவேல்
வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே
றியார் பெற்றார்? யார் பெறுவார்?

கண்ணன் குசேலரது குடும்பத்தினைப்பற்றி உசாவுதல்

10. நின்னுடைய மனைக்கிழத்தி
நிரம்புபெரு நீர்மையளோ?
மன்னுடைய சொற்காத்துச்
சோர்விலா மாண்பினளோ?
தன்னுடைய வுயிராநின்
றனைப்பேணுந் தன்மையளோ?
உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல வுஞற்றுவளோ?

11. பைங்குதலை வாய்மைந்தர்
பலர்பிறக்க வேண்டுமே?
எங்குமரும் புகழுடையாய்!
எத்தனைமைந் தர்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்துஞ்
சிங்கலறப் புரிந்தனையோ!
செய்தனையோ உபநயனம்?

12. இவர்தந்தை யென்றோற்று
னென்றறிஞ ருரைக்கும்வகை
இவர்கின்ற மனத்தினராய்
இருங்கலைகற் றுணர்வாரே?
உவர்கொண்ட கடலாடை
புடையுடுத்த உலகமெலாம்
உவர்கொண்ட குணமெவர்க்குண்
டெனமொழிய உயர்வரே?

கண்ணன், குசேலரிடம் நீ யாது கொணர்ந்துள்ளாய் என வினவுதல்

13. பந்தனை யகன்ற மேலோய்
பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு
வந்தனை அதனை யின்னே

தந்தனை யாயி னன்று
　　தருசுவைப் பக்கணத்தென்
சிந்தனை நின்ற தென்றான்
　　தெரிவரும் வஞ்சக் கள்வன்.

குசேலர் கொணர்ந்த அவலைக்கண்டு கண்ணன் தானே எடுத்து உண்ணல்

14. மலிதரும் அன்பின் வந்த
　　வண்பொதி யவிழ்த்து நோக்கி
வலிதரு மவற்றுள் நன்று
　　வாய்த்தது நமக்கி தென்று
ஒலிதரு கழற்கா லையன்
　　ஒருபிடி யவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயிற்
　　போகட்டுக் கொண்டான் மாதோ.

15. செறிதரு சுவைத்தி தென்றுந்
　　தேவர்க்கு மரிய தாகும்
அறிதரு விருப்பி னில்லின்
　　அமைத்ததே பழைது மன்று
குறிதரு விலைப்பாற் சென்று
　　கோடலிவ் வளத்த தோவென்(று)
உறியளை வாரி யுண்டோன்
　　ஒருபிடி யவல்தின் றானே.

16. முன்னுமிவ் வவலொன் றேனும்
　　முனைமுறிக் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றாகும்
　　பட்டவங் கையும ணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம
　　குளமும் வேண்டுவதின் றென்று
உன்னுபல் லுலகு முண்டோன்
　　ஒருபிடி யவல்தின் றானே.

குசேலர் தமரூர்க்குப் புறப்படுதல்

17. கதிருதிக்குங் காலையெழீஇக்
 கடன்பலவும் முற்றியடர்
மூதிர்புலன்செற் றருஞானம்
 முயன்றடைந்தோன் ஆதலினல்
மதிகுலத்து மன்னவன்பால்
 வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனாய்
 நினைந்தூர்க்கு வழிக்கொண்டான்.

—வல்லூர் தேவராசப் பிள்ளை.

3. இரட்சணிய யாத்திரிகம்

1. ஒருவன் அன்புடைய தந்தைக்
 கோரிரு புதல்வர் உள்ளார்
இருவரில் இளையான் ' ஐயா!
 என்ஒரு பாகம் எற்குத்
தருக' என்றிரந்து கேட்பத்
 தந்தைதன் உரிமை யாவும்
திருவிகற் பாகப் பங்கிட்(டு)
 உதவினன் நேர்மை யாக.

2. கைப்பொருள் கண்டான்; தந்தை
 கரைந்த சொற்பொருளைக் காணன்;
மெய்ப்பொருள் அறியான்; உள்ளம்
 விழைந்தசிற் றின்ப மாய
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
 புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான்; அந்தோ!
 அகதியா யினன்சின் னளில்.

௩ அங்கொரு குடும்பி தன்னை
 அடுத்தவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
 செல்ல அத்தேசம் எங்கும்

வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்காற் றாறனய்
நுங்கினான் பன்றிக் கூட்டும்
நொறுங்குகுற் றமித்த விட்டை.

4. குற்றமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்றுளம் தெளிந்தா னாகிச்
சஞ்சலித் தழுதென் தந்தைக்(கு)
உற்றவூ ழியரனேகர் உண்டுதேக்
கெறிய யான் ஓர்
துற்றுண வின்றி ஆவி
சோர்குவல் இதென்னூர்ப் புத்தி.

5. 'புகலொன்றும் இல்லேன்' என்னாப்
புந்தியில் பிழையை உள்ளி
மிகவுள முடைந்து நைந்தான்
மெய்ம்மனத் தாபங் கொண்டான்
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்தான் பெற்ற
மகவெனப் பரிவர் அல்லால்
மறுத்திடார்' எனத்தே றற்றான்

6. ஒல்லையே எழுந்தான் தந்தை
உத்தம குணமுன் னீர்க்கீ
அல்லல்செய் பசியின் உந்த
அடுத்தனன்; அறிந்து, தந்தை
வல்லைவந் தணைந்து, முத்தி
மகிழ்ந்தனன் மகவா னைக்கோர்
எல்லையும் உளவோ? மைந்தன்
எத்தனை பிழை செய்தாலும்.

7. 'எந்தையே! எந்தையே! என்று
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்' துமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்

புந்தியற் றளவில் பாவம்
புரிந்தனன் ; இனியான் உந்தம்
மைந்தனன் நுரைக்கத் தானும்
அபாத்திரன் ; மதியொன் றில்லேன்.

8. ஐய ! மன்னிக்கச் சித்தமாயின்
மற் றளியனேன் யான்
உய்யுமா றருளி நும்பால்
ஊழியத் தொருவ னக்கி,
வையகத் திருத்து, கென்று
வாய்திறந்(து) அரற்றி நிற்ப
'நையல்' என் றருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால்.

9. 'மகன் இவன் மரித்தான் :
இன்னே மறுத்துயிர் பெற்றானைக்
தகவுடை விருந்தெ மர்க்குச்
சமைக்கென'ப் பணித்து மைந்தற்(கு)
உவகையின் வத்தி ராதி
உடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ் கொண்டாடி
இருந்தனன் புதல்வ னோடும்.

—ஏ. கிருஷ்ணப் பிள்ளை

4. மனோன்மணீயம்

வாய்க்கால்

தமக்குஊண் நல்கும் வயற்கு உபயோகம்
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம் ஐயா !
அலைகடல் மலையா மலையலை கடலாப்
5. புரட்டிட அன்றோ நடப்பதுஇச் சிறுகால்
பார்இதோ ! பரற்களை நெறுநெறு என்றரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக்கு அடங்கிய மண்கல் புல் புழு
இன்னதென் றில்லை ; யாவையும் ஈர்த்துத்

தன்னுட் படுத்தி முன்னீர் மடுவுட்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை யெனவோர்ந்து உருட்டிக்
கொண்டு சென்றீ இட்டுமற்று "ஐயா!
அண்ட உலகில் ஆணையின் மழையாச்

சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந்து ஓடியும்,
ஊறிடுஞ் சீரிய வூற்றாய்ப் பரந்தும்,

ஆறாய் நடந்தும் மடுவாய்க் கிடந்தும்
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல பாடுயான் பட்டு அங்கு ஈட்டியது
அற்பமே யாயினும் ஆதரவாய்க் கொள்;
இன்னமும் ஈதோ ஏகுவன்" எனவிடை

பின்னரும் பெற்றுப் பெயத்தும் எழிலியாய்
வந்துஇவன் அடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்கும்இந் நிலைமையர் யாவர்?

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

IV. சிறு நூல்கள்

1. தனிப்பாடல்

1. காரேயுன் னீரையெல்லாங் கள்ளன் கவர்ந்தானோ
நீரே யுதவாய் நெறியாமோ—நேரேதான்
வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
பேரிகொண்டு நீதிரண்டு பெய்

2. செய்வேனெனச்சொல்லிச் செய்யாவுலோபரைப்போற்
பெய்வே னெனக்காட்டிப் பேர்முகிலே—மைவானி
லோடுவாய் நிற்பா யுருமுவாய் மின்னுவாய்
நீடுவாய் பின்பெய்யாய் நீ

3. வேண்டுங்கால் நீபெய்யாய் வேண்டாத போதுபெய்வாய்,
தாண்டுநீ செய்வதெல்லாந் தப்புகளே—நீண்டுலவும்
வட்டமுகி லேயுனக்கு மாசெனப்பேர் தந்தோர்க்குப்
பட்டமது கட்டுவேன் பார்.

—வேதநாயகம் பிள்ளை.

2. சுதந்திரம்

1. மீன்கடலே எழுந்தாலும் விண்சுடரே விழுந்தாலும்
மான்மலைகள் சாய்ந்தாலும் மண்கம்ப மானாலும்
ஊன்கொத்தி கண்டதுண்டம் ஒன்னலர்கள் செய்தாலும்
வான்மருவ நேர்ந்தாலும் மறப்பதன்று சுதந்திரமே.

—திரு. வி. க.

3. இளந்தமிழனுக்கு

2. அன்பினோடு அறிவுசேர்ந்த ஆண்மை வேண்டும்
[நாட்டிலே
அச்சமற்ற தூயவாழ்வின் ஆற்றல் வேண்டும் வீட்டிலே
இன்பமான வார்த்தைபேசி ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள் என்றஎண்ணம் வேண்டுமே
துன்பமான கோடிகோடி சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும் துச்சவாழ்வு தொட்டி
[டோம்
என்பதான நீதியாவும் இந்தநாட்டில் எங்கணும்
இளந்தமிழா! என்றும் நின்று ஏடெடுத்துப் பாடுவாய்.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

V. பல்சுவைப் பகுதி

1. அழகரந்தாதி

1. நம்பிநின் றேனுன் சரணா
விந்தத்தை நன்னெஞ் சென்னுஞ்
செம்பினில் றேபொறித் தேனுனக்
காளென்று தெய்வக்குழாம்

பம்பிநின் றேசெறிக் கும்பதம்
காணப் பதறுகின்றேன்
கொம்பிநின் றேன்சொரி யுஞ்சோலை
மாமலைக்கொற்றவனே

2. கொற்றவி ராவணன் பொன்முடிவீழக்
கொடுங்கண் துஞ்சல்
உற்றவி ராவணன் மாளவெய்
தோனென் பரதனுக்குச்
சொற்றவி ராவணன் மாலிருஞ்
சோலை தொழுதுவினை
முற்றவி ராவண நற்றமிழ்
மாலை மொழிந்தனனே.

3. மொழித்தத்தை கொஞ்சு மலையங்
காரன்முன் னூற்றுவரை
அழித்தத்தை மைந்தர்க் கரசளித்
தோனடி நாட்டொடர்ந்தெ
னழித்தத்தைச் செய்தன்றிப் போகா
வினையை யொருநொடியில்
கழித்தத்தை யென்சொல்லு கேன்தனக்
காட்பட்ட காலத்திலே.

4. கால மலைக்கும் புவனங்
களைக்கரந் தாயுதிரங்
கால மலைக்குமைத் தாயழு
காகமலத்துப் பஞ்சார்
கால மலைக்கும் புவிக்குமன்
பாவுயிர் காயம்விடுங்
கால மலைக்குங் கடுங்கூற்றைக்
காய்ந்தென்னைக் காத்தருளே.

5. அருளக் கொடியிடைப் பூமாது
நீயும்வக் தாளினுமாம்
இருளக் கொடிய கமன்வருங்
காலத் திகழினுமாங்

கருளக் கொடியமழ காவலங்
காரவன் கஞ்சனெஞ்சத்
துருளக் கொடிய வுதைத்தாய்
எனதுயி ருன்னுயிரே.
—பிள்ளைப் பெருமாளையங்கார்.

2. சிலேடை

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

1. ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேயிரையும்;
மூடித் திறக்கில் முகங்காட்டும்;—மூடுமண்டை
பற்றில் பரபரெனும்; பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

பாம்பும் வாழைப்பழமும்

2. நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.
—காளமேகப் புலவர்.

3. தேவாரம்

1. மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.
—அப்பர்.

4. திருவருட்பா

1. கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துய ரச்சமா திகளைத்
தருணநின் னருளால் தவிர்த்தவர்க் கின்பந்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உளூற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.
—இராமலிங்க அடிகள்.

உரை நடை

1. நம் பண்டைய நீதிநூல் ஆசிரியர்

[மகாமகோபாத்தியாய, பண்டிதமணி,
திரு. மு. கதிரேசச் செட்டியார்]

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வண்ணம் நம் பெரியார் நமக்கு உதவிய நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கினையும் பற்றியனவேயாம். இவ்வெல்லாம் நீதியின்பால் அமைவன வெனினும், இவற்றுள் பொருட் பகுதியைப்பற்றி யெழுந்த நூல்களையே 'நீதிநூல்' எனப் பெரியோர் வழங்குவர். அப்பொருட் பகுதியை மாத்திரம் சிறப்பாக எடுத்துக் கூறிய ஆசிரியரும் உளர். அதனோடு அறம் முதலிய ஏனைய உறுதிப் பயன்களையும் இயைத்துக் கூறிய ஆசிரியர்களே பெரும்பான்மையோர் ஆவர். இம்முறையில் தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கிய வண்மையிற் சிறந்த பெரியார் திருவள்ளுவரேயாவர். அவர்க்கு முன்னும்பின்னும் நீதி நூலருளிய ஆசிரியர்கள் வடமொழியிலும், தமிழிலும் பலர் இருந்தனர். எனினும், அன்னார் புகழொளி யெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் கீர்த்தி அப்பன்மீன் நடுவண் பான்மதி போலத் திகழ்வதாகும். "எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன் பால், இல்லாத எப்பொருளும் இல்லையால்" என்றபடி உள்ளுநர் உன்னும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழியிற் காணப்படுவனவேயாம். தம் தெள்ளிய கல்வியானும் ஒள்ளிய மதி நுட்பத்தானும் உலகியலையும் மக்கள் வழக்க ஒழுக்கங்களையும் அழுந்தியறிந்து, உள்ளத்தமைத்துத் 'திருக்குறள்' என்னும் நீதிக் களஞ்சியத்தை உலகமுள்ளளவும் நிலைபெற யாத்துதவிய பெருமையே அப்பொய்யில் புலவர் புகழொளி விஞ்சுதற்கு ஏதுவாயிற்று.

திருவள்ளுவர் எழுதிய நூல் ஒழுங்கிற்கும் ஏனையோர் நூன் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் பலவாம். தாம் கூற மேற்கொண்ட பொருளை நன்றாக ஆராய்ந்து இவ்வாறு தெளிவுபடுத்த வேண்டுமென்று உள்ளத் தமைத்துப், பின்னர்ச் செய்யுள் வடிவில் இவர் வெளியிட்டுள்ளார். பெரும்பான்மையும் மேற்கொண்ட பொருளின் இலக்கணம், அதன் சிறப்பு, அதனாலாம்பயன், அஃதில் வழிவருந்தீங்கு என்று இன்னோரன்ன பாகுபாடுகளை வரையறுத்துக்கொண்டு கூறுதல் இவர் இயல்பு. எப்பொருட்கும் வரையறையும் தெளிவும் இன்றியமையாதன. வரையறுத்துத்

தெளிவு படுத்தப்படாத பொருள்கள் மக்கள் உளங்கோடற்கு ஏற்றனவாகா என்பது பெரியார் துணிபு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு, வடமொழி தென்மொழிகளிலுள்ள பற்பல நீதி நூல்களையும் நன்கு கற்று ஆராய்ந்த பரிமேலழகர் என்னும் புலவர் பெருமான் இயற்றிய உரையே எல்லா உரைகளிலும் சிறந்ததாகப் போற்றப்படுவது. அவ்வுரையாளர் ஓரிடத்து, "தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்" என்று எழுதியிருத்தலால் வடமொழியிற் புகழ் மிக்கவர்களான வியாழ வெள்ளிகளின் நூற் கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய்மொழியிற் புலப்படுகின்றன, என்பது பரிமேலழகர் கருத்தாம். ஒரு நாட்டினர் வழக்க ஒழுக்கங்களை உணர்ந்து, அவற்றிற் கேற்ப நீதிகளை வரையறுக்கும் ஆசிரியர்கள், கால இடையறவால் சேய்மைக் கண் உள்ளார் எனினும், பொருள் ஒற்றுமைக் கருத்தால் அணிமையில் உள்ளவராகவே கருதப்படுவர்.

வடமொழியில் மனு முதலிய நூல்கள் அறம் பொருள் இன்பங்கள் விவரக் கூறப்பட்டுள்ளன. பொருட் பகுதியாகிய அரசியல் முறையைத் தனிமையில் விளக்க எழுந்த நூல்களுள், பிருகற்பதியாகிய வியாழ குருவால் தேவர்கள் பொருட்டு இயற்றப்பட்ட பாருகற் பத்தியமும், உசனஸ் என்னும் சுக்கிராச்சாரியரால் அசுரர் பொருட்டு இயற்றப்பட்ட ஔசநசமும் முதலில் நினைக்கத் தக்கனவாம். இவற்றின் பின் எழுந்தன சந்திரகுப்தன் காலத்து அமைச்சராக இருந்த சாணக்கியரால் ஆக்கப்பட்ட கௌடலியமும், காமந்தகனால் இயற்றப்பட்ட காமந்தக முதலியனவும் ஆம்; இவற்றுள் இக்காலத்துச் சட்டநூல் வல்லோராற் பெரிதும் தழுவப்படுவது கௌடலியம் என்னும் நூலேயாம். வியாழனால் ஆக்கப்பட்ட நூலினும் வெள்ளியாகிய சுக்கிரரால் ஆக்கப்பட்ட நூல் தென்னாட்டு வழக்க ஒழுக்கங்களுக்குப் பெரிதும் இயைபுடையதாகும். இவற்றின்பின் தோன்றிய கௌடலிய நூலின் தொடக்கத்தில் அதன் ஆசிரியர் பூர்வாசார்ய வணக்கமாகச் "சுக்கிர பிருகஸ்பதிப்யாம் நம:" 'சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்' என்று கூறியுள்ளார். இதனாலேயே வெள்ளி நூலின் சிறப்பும் புலப்படுவதாகும். பிற்காலத்துக் கவிஞர் பெருமானாகிய கம்பர், "வெள்ளியும் பொன்னும் என்பார் விதி

முறை வகுத்த நூலில்" என்று முறைப்படுத்துக் கூறியதும் இதனை வலியுறுத்தும். இன்னனம் சிறந்துள்ள ஔசநசத்தின் சுருக்கமே 'சுக்கிரநீதி' யென்னும் பொருள் நூலாகும்.

இச்சுக்கிர நீதியைத் தமிழ் மக்கள் நலங்குறித்து மொழி பெயர்த்த பொழுது, யான் கண்ட புதுமைகளும், பழமைக்குரிய சான்றுகளும் பலவாம். 'புதல்வர்ப் பேற்றை விரும்பும் பெண் மக்கள் வயிர மணியை அணிதலாகாது' என்று கூறப்பட்டுளது. கருவைத் தடைப்படுத்தற்கு வைரவொளி எங்ஙனங் காரணமாகும் என்பதைக் கலவை (இரசாயன) நூலார் ஆராய்தல் வேண்டும். இது போன்றன புதியனவாம். நீர்ப்பொறி, இசைப்பொறி, காற் றியக்கும் பொறி, கம்பி வழிச் செய்தியனுப்புங் கருவி, நீராவி யால் இயக்கப்படும் பொறிகள் முதலிய இக்காலத்துக் காணப் படும் இயந்திரத் தொழில்களைப் பற்றியும் அந்நூல் கூறியுள்ளது. ஆனால் இவற்றின் அமைப்பு முறைகள் வேறுபட்டிருக்கலாம். போர்த்தொழில் முறைகளும், போர்க் கருவிகளும், பொறி வழி யாக ஆயுதங்களைச் செலுத்தும் முறையும், வெடி மருந்து செய் யும் முறையும், படைகளின் அணிவகுப்புக்களும் பிறவும் செவ்வை யாகக் கூறப்பட்டுள்ளன. மக்கள் இயங்குஞ் சாலை (Road) ஆமை முதுகு போல் இருக்கவேண்டு மென்று கூறப்பட்டுளது. ஆமை முதுகு இருமருங்கும் தாழ்ந்து நடுவிடம் சிறிது உயர்ந்திருக்கும். இது சாலைவழியிற் பெய்யும் மழை நீரால் அச்சாலை கெடாமல் இருப்பதற்குக் கருதப்பட்டதாகும். மேலும், இந்நூலின் கண் அரசனியல்பு, அவன் சுற்றங்களாகிய அமைச்சர் முதலியோ ரியல்பு, வினை செய்யும் ஏவலரியல்பு, கிராம பரிபாலனம், வாணிக முறை, நியாய மன்றங்கள், நீதிபதிகளின் அதிகாரங்கள், வழக்கின் இயல்புகள் முதலியன விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

கரிகாற் சோழ அரசனைக் குடிமக்களுள் ஒருவனாகச் சிலப் பதிகாரம் கூறும். இதனால் அரசன் குடிமக்களின் உயர்ந்தவ னாகத் தன்னை எண்ணலாகாது என்பது புலனாகும். செங் கோன்மை தவறாது செலுத்தும் நல்லரசற்கு அரசியர் காரியம் தன்னலங் குறித்ததாகாது; குடிமக்கள் நலங்குறித்ததேயாம். இங்கே, கோவலனைக் குற்றமில் வழியும் கொலை புரிவித்த பாண்டி யனைக் கண்ணகியார் வெகுள, அது காரணமாகப் பாண்டியன் உயிர் இழந்தான் என்று தண்டமிழ்ப் புலவர் சாத்தனார்

செங்குட்டுவற்குக் கூறினாராக, அது கேட்ட செங்குட்டுவன், பாண்டியன் தவறின்மையையும் அரசியல் நடத்தும் சிரமத்தை யும் சாத்தனார்க்குக் கூறுமுகமாக,

"மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென"

என்று இளங்கோவடிகள் கூறியது நினைந் தின்புறத் தக்கது. "அரசன் குடிகளிடத்தினின்று தனக்குரிய அரசிறையாகிய வேதனத்தைப் பெறுதலால் அக்குடிகளுக்கு ஏவலாளர் தன்மை யுடையனுவான்" எனவும், "பூமரத்தை வளர்த்து மலர் பறித்து மாலை கட்டிப் பயன்பெறுபவனை யொப்பக் குடிகளைப் பாது காத்து அவர்பால் அரசிறை பெறவேண்டும்" எனவும், "அங்ஙன மன்றி அம்மரத்தை எரித்துக் கரிசெய்து பயன்பெறுதல்போலக் குடிகளைக் கெடுத்துச் சிறுபயன் கொள்ளலாகாது" எனவும் சுக்கிர நீதி கூறுகின்றது. இச்செய்திகள் மிகவும் பாராட்டற்குரியனவாம்.

திருக்குறட் பொருட் பகுதியில் அரசர், அமைச்சர், படைத் தலைவர் முதலியோரின் இலக்கணங்களாகக் கூறப்பட்டனவும் பிற வும் யாண்டும் காண்டற்கரியனவாம். ஒற்றர் இயல்பு கூறுங்கால், ஒற்றும் நீதிநூலும் ஆகிய இரண்டும் அரசர்க்கு இருகண்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் இலக்கணங் கூறுங்கால், ஒரு நாட்டில் வாழ்வார் தேடி வருந்தாமல் வேண்டுவன வெல் லாம் ஆங்கே பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்னும் கருத்தமைய "நாடென்ப நாடா வளத்தன" என்கிறார். பிணி யின்மையும், நிரம்பிய செல்வமும், விளைவும், இன்பமும், காவலும் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு செய்வன எனவும் கூறப் பட்டுள்ளன. இதனால் அரசன் தன் நாட்டை இத்தகுதிகளுக்கு உரியதாக அமைத்துக் கொள்ளல் வேண்டுமென்பது புலனாகும். அமைச்சரியல்பு கூறுங்கால், வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை என மூன்றதிகாரங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஊன்றிப் படிப்பார்க்குத் தாம் செய்யவேண்டிய காரி யங்களைப் பற்றிய தெளிவு கல்லெழுத்துப்போல நெஞ்சிற் பதிவ தாம். திருக்குறளே யல்லாமல் நாலடியார், நான்மணிக்கடிகை,

திரிகடுகம், சிறுபஞ்ச மூலம் முதலிய சங்கமருவிய நீதிநூல்களும் தமிழிற் பலஉள. அவை யெல்லாம் மக்கள் ஒழுக்க முறைகளை வரையறுத்துத் தெளிவு படுத்துவனவாம்.

பண்டைய நீதி நூலார், கூடியவரை முயன்று தம் அநுபவத்திற் கண்ட உண்மைகளை நெடுங்காலமாயினும் சிதையாமல் இருத்தற் பொருட்டுச் சூத்திரவடிவிலும் செய்யுள் வடிவிலும் யாத்துதவினர். அவை உரை நடையில் ஆக்கம் படாமை குறையென்ப ஒருசாரார். முற்காலத்தில் இவ்வளவு விரிவாக அச்சிடுதற்குரிய கருவிகள் இல்லை. கற்பவர் நெஞ்சத்தில் உரைநடையினும் செய்யுள் நடை நிலைபெற்று ஞாபகத்துக்கு நன்கு பயன்படும். காலந்தோறும் மக்கள் வழக்க ஒழுக்கங்கள் மாறுபடுதல் இயல்பே. அம்மாறுபாட்டிற்கேற்ப நீதிகளும் திருத்தப்படும் என்பது சொல்லாமலே விளங்கும். மகாபாரதத்துக் கண்ட சில அறங்கள் இக்காலத்துப் பொருத்தமாகக் கணப்படா. அது பற்றிப் பேரறிஞராகிய வியாசமுனிவர் இழித்துரைக்கப் படுவாரல்லர். ஆகவே எத்தகைய நீதிகளையும் காலம் நோக்கிக் கொள்ளுதலும் தள்ளுதலுஞ் செய்தல் வேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதைக் கடைப்பிடித்து மனம் போனபடி செய்யத் துணிதல் நன்றன்று. இங்ஙனம் வடமொழி, தென்மொழிகளிற் சிறந்த நீதிநூல்களை ஆக்கிய பெரியாருடைய இயல்புகளை இங்கே கூறியன கொண்டு தெரிந்து கொள்க.

பயிற்சி

1. பெரியார் எவற்றை நீதிநூல்கள் என வழங்குவர்?
2. பொய்யில் புலவராம் திருவள்ளுவரின் புகழொளி விஞ்சுதற்குக் காரணம் என்ன?
3. வியாழ வெள்ளிகளின் நூற்கருத்துக்கள் திருக்குறளில் புலப்படுகின்றன என்பதற்கு ஆதாரம் யாது?
4. வியாழ நூலைக் காட்டிலும் வெள்ளி நூலே விழுமியது என்பதை விளக்குக.
5. சுக்கிர நீதியின் சிறப்புகளைத் தொகுத்து வரைக.
6. நாடென்ப நாடாவளத்தன என்பதற்குப் பொருள் யாது?
7. நாட்டிற்கு அழகு செய்யும் ஐந்தினைக் கூறுக.
8. பண்டைய நீதிநூலார் தங்கருத்துக்களை செய்யுள் வடிவிலும் சூத்திர வடிவிலும் வெளியிடக் காரணம் என்ன?

2. இருவர் சாட்சி

[திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, பி.ஏ.,பி.எல்.]

தேனடைந்த சோலைத் திருநாட்டைத் துறந்து, கானகம் போந்த இராமன் அங்கு அருந்தவ முனிவர் பலரைக் காணும் பேறு பெற்றான். அன்னவருள் ஒருவர் அகத்திய முனிவர். அவர் முத்தமிழும் முழுதுணர்ந்த வித்தகர். அம்முனிவர் இராமனைக் கண்டு அகமகிழ்ந்தார்; அன்புடன் வரவேற்றார்; அறம் திறம்பிய அரக்கரை அழிப்பதற்குப் படைக்கலம் அளித்தார்; சீதையோடும், தம்பியோடும் இராமன் சில காலம் தங்கியிருத்தற்குக் கோதாவரி ஆற்றின் கரையிலுள்ள பஞ்சவடிச் சோலையே ஏற்றதாகும் என்றெண்ணி அதன் செழுமையை எடுத்துரைத்தார்.

முனிவர் காட்டிய வழியே மூவரும் நடந்து சென்று பஞ்சவடிச் சோலையை அடைந்தார்கள். அதன் இயற்கை அழகு அவர் கருத்தை முற்றும் கவர்ந்தது. அடுக்கடுக்காக ஓங்கி உயர்ந்த பெருமலையின் அடிவாரத்தில், மாசறத் தவழ்ந்து சென்ற ஆற்றின் அருகே, நறுமணம் கமழ்ந்து நின்றது அப்பூஞ்சோலை. இலக்குவன் அப்பருவச் சோலையில் ஓர் இனிய பர்ணசாலை கட்டி முடித்தான்.

"அனையதோர் தன்மையால்அவ் வருவிநீர் ஆற்றின் பாங்கர்ப்
பனிதரும் படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்
தனியிடம் அதனை நண்ணித் தம்பியால் சமைக்கப்பட்ட
இனியபூஞ் சாலை எய்தி இருந்தனன் இராமன் இப்பால்"

பஞ்சவடிச் சோலையில் அமைந்த பூஞ்சாலையைக் கண்டாள் அரக்கர்கோன் தங்கையாகிய சூர்ப்பணகை; அச்சாலையுள் இருந்த சீதையின் அழகைக் கண்டு வியப்பும் திகைப்பும் உற்றாள்; இராமன் வெளியே சென்றிருந்த வேளைபார்த்து நலமெலாம் ஒருங்கே வாய்ந்த அந்நங்கையை அரக்கர் கோமானிடம் எடுத்துச்செல்லத் தலைப்பட்டாள். அப்பொழுது பர்ணசாலையின் புறத்தே நின்று காவல் புரிந்த இலக்குவன் விரைந்து போந்து வன்னெஞ்சக் கள்ளியின் மூக்கறுத்துச் சீதையை விடுவித்தான். இங்கனம் சூர்ப்பணகை இழந்த மூக்கே அரக்கர் குல நாசத்திற்கு அடிப்படி கொடுத்தவாறாயிற்று.

மூக்கற்ற சூர்ப்பணகை இராவணனிடம் போந்து தன் குன்றயை முறையிட்டாள். தங்கையின் வாயிலாகப் பஞ்சவடிச் சாலையில் வாழ்ந்த சீதையின் அங்க நலங்களை அறிந்து வெறியுற்ற வேந்தன் அவளைப் பெறுதற்குரிய வழிகளை நாடினன்; மாமனாகிய மாரீசனைப் பொன்மானாக்கிப் பஞ்சவடிச் சோலையிற் போக்கினன். அம்மானின்மீது ஆசை வைத்தாள் சீதை. அதை அறிந்த இராமன் பொன்மானைப் பற்றித் தரக் கருதி அதன் பின்னே சென்றான். அவள் பணித்தவாறே இராமன் சென்ற திசையை நோக்கி இலக்குவனும் சென்றான். ஒருவர் காவலுமின்றித் தன்னந்தனியளாய் இருந்த சீதையைக் கவர்ந்து செல்ல விரும்பி அரக்கர் கோன் பஞ்சவடிச் சாலையை அடைந்தான்; ஆயினும் கற்பின் செல்வியாய சீதையின் திருமேனியைத் தீண்டினால் தன் தலை வெடிக்கும் என்றஞ்சிப் பர்ணசாலையைப் பெயர்த்தெடுத்தான்; அதனை விமானத்தில் ஏற்றி இலங்கையை நோக்கி விரைந்து சென்றான்.

அரக்கனது வஞ்சனையறிந்த சீதை, நெஞ்சம் துடித்தாள்; நெடுங் கண்ணீர் வடித்தாள். 'என்னைக் காப்பவர் யாருமில்லையோ' என்று கதறினாள். அக்குரல் கேட்ட கழுகரசனாகிய சடாயு பறந்தோடி வந்தான். அரக்கனது விமானத்தைத் தடுத்தான்; பெருஞ்சிறகால் அவன் தலையில் அறைந்தான். ஆயினும், அரக்கனது வாளாண்மையின் எதிரே கழுகின் தாளாண்மை செல்லாதாயிற்று. சிவன் தந்த வாளால் சடாயுவின் சிறகினை அறுத்தெறிந்து இலங்கையை அடைந்தான் இராவணன்.

பொன்மானின் பின்னே சென்ற இராமனும், அவன் பின்னே சென்ற இலக்குவனும் மாயமானாக வந்தவன் அரக்கனே என்று அறிந்து மனக்கவலை கொண்டனர்; பஞ்சவடியை நோக்கி விரைந்தோடினர்; பர்ணசாலையைக் காணாது மனம் பதைத்தனர். மானமும் சீற்றமும் அவர் மனத்தை அறுத்தன. சிறிது தூரம் கால் சென்ற வழியே நடந்து சென்று குற்றுயிராய்க் குருதியிலே குளித்து கிடந்த கழுகரசனைக் கண்டார்; கண்ணீர் சொரிந்து நின்றார். அப்பொழுது இராவணன் இழைத்த தீமையைக் கழுகரசன் எடுத்துரைத்தான்.

சொல்லி முடித்த பின்னர் அவன் நல்லுயிர் பிரிந்து போயிற்று. அதனால் சடாயுவின் மரண வாய்மொழி ஒரு சிறந்த சாட்சி. இலங்கை மாநகரிலும் சீதை பர்ணசாலையில் இருந்தாளேயன்றி அரக்கரது நிலத்தில் அடிவைத்தாளில்லை என்பதற்கு அநுமன் திருமொழி அமைந்த சான்று. ஆகவே கடல் சூழ்ந்த இலங்கை மாநகரில் கற்பின் காவலேயன்றிப் பிறிதொரு காவல் இன்றி,

"இரக்கமென்று ஒன்றுதானே ஏந்திழை வடிவம் எய்தித்
தருக்கிய சிறையுற் றன்ன தகையள் அத்தமியள் அம்மா."

என்று கண்டோர் வியக்கும் முறையில் சிறைச் சாலையைத் தவச் சாலையாக்கிய சீதையின் கோலத்தை இருவர் சாட்சியால் அறிந்து இன்புறுகின்றோம்.

பயிற்சி

1. கானகத்தில் அகத்திய முனிவர் இராமனுக்குச் செய்த நன்மைகள் யாவை?
2. பஞ்சவடிச் சோலையின் சிறப்பு எத்தகையது?
3. இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற விதம் யாது?
4. இராவணன் இழைத்த தீமையைக் கழுகரசன் இராம லக்குவருக்கு எடுத்துரைத்த விதம் யாது?
5. அசோகவனத்தில் சீதையின் தவக்கோலத்தைக் கண்ட அநுமன் மனமுருகிப் பாடிய பாடலின் கருத்து என்ன?
6. பெருங்கடல் கடந்து மீண்ட அநுமன் இராமனிடம் யாது தெரிவித்தனன்?
7. இக்கட்டுரைக்கு "இருவர் சாட்சி" என்ற பெயர் யாங்ஙனம் பொருத்தமுடைத்து?

3. சிற்பக் கலையழகு

[திருமதி ஆர். எஸ். உருக்குமணி அம்மையார், M.A. அவர்கள்]

தஞ்சைக் கோயிலின் திருப்பணி நடைபெற்ற காலத்தில் இராஜராஜன் நாடோறும் சிற்பிகளின் வேலையைப் பார்வையிட வருவது வழக்கம். சில நேரங்களில் சிற்பிகள் மீது வெயில் படாதவாறு தானே குடை கவித்து நிற்பானாம். ஒரு சமயம் சிற்பித் தலைவன் மிகவும் நுணுக்கமான சிற்ப வேலையில் ஆழ்ந்திருந்தனன். அண்மையில் அரசர் வந்து நிற்பதையும் உணர்ந்திலன். சிற்பி, தன் அடைப்பைக் காரனின் பெயரைச் சொல்லி, "வெற்றிலை மடித்துக் கொடடா" என்றனன். அந்நேரத்தில் அடைப்பக்காரன் வேறு ஏதோ அலுவலாகச் சென்றிருந்தான். "அடைக்காய் இல்லாமையால் சிற்பியின் கவனம் சிதையுமே" என அரசன் கருதினான். ஆகையால், அரசன் தானே அடைப்பக்காரனாக இருந்து வெற்றிலை மடித்துக் கொடுத்தனனாம்; சிற்பி வெற்றிலையையும் அடைக்காயையும் வாயிலிட்டு மென்றதும், வழக்கிற்கு மாறாகத் தாம்பூலம் நறிய திரவியங்களோடு வெகு பக்குவமாக அமைந்திருந்ததை உணர்ந்தான்; உடனே திரும்பி நோக்கினான்; மன்னர் மன்னனைக் கண்டு திடுக்கிட்டான். "தவறிழைத்தேன்! பெரும் பழிக்கு ஆளாயினேன்: இப்பெருங் குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும்" என்றான்.

அதுகேட்ட அரசன், "இல்லை, இல்லை, தவறு ஒன்றும் நிகழவில்லை. ஆடல் வல்லான் அழகன் அன்றோ? அவ்வழகனை அழகுக் கோயிலில் அமைக்கிற அன்பர் நீவிர்; அழகனின் கோயிலில் அழகை ஆக்குகின்ற உமக்கு யான் அடைப்பைக் காரனாகத் தொண்டாற்றும் பேறு பெற்றேன்" என்றான்.

சிற்பத் தலைவனின் கண்களினின்றும் நீர் மளமளவென்று பெருகிற்று. அவனுக்குப் பேச நாவெழவில்லை. பெரிய கோயிலின் வேலை முடிந்ததும் அவன் தனது திறமை எல்லாம் விளங்கும் பொருட்டு முருகக் கடவுளின் ஆலயம் ஒன்றைக் கட்டினான்.

அரசனுக்கு அழகிலே இருந்த ஆர்வத்தை என்னென்றுரைப்பது? அந்த அழகை உருவாக்குவதிலே அச்சிற்பிக்கு இருந்த ஆர்வத்தைத்தான் என்ன என்று வரைவது!

பெரிய கோயிலின் திருப்பணிகள் யாவும் முடிவுற்றன. சிவலிங்கத்தை மூலத்தானத்தில் பிரதிட்டை செய்தற்பொருட்டு அரசன் ஆதி சைவரை அழைத்தான். அவரும் மருந்து அரைத்து இலிங்கத்தைப் பந்தனம் செய்தனர். மருந்து இளகி இலிங்கம் பந்தனம் ஆகாமற் போயிற்று. தாங்கவொண்ணுத் துயரத்தால் அரசன் நெஞ்சு புண்ணுகினன். நின்ற இடத்திலேயே உயிரை விட்டுவிட விரும்பினுன். அந்நேரத்தில், "கரூர்த்தேவரை இங்கே அழைத்தால் உன் மனக்கவலை தீரும்" என்றோர் அசரீரி எழுந்தது. அரசனது உள்ளத்தில் நம்பிக்கை உதயமாயிற்று. அரசன் வெறிகொண்டவனைப்போல், "கரூர்த் தேவர் யார்? கரூர்த் தேவர்யார்?" என்று அங்கே நின்றவர்களைத் தனித்தனியே கேட்கலானுன். அரசன் சிறு குழந்தையைப் போல் கலங்கித் தவிப்பதை அங்கே இருந்த பெரியார் கண்ணுற்றார். அவர் தாம் போக நாதர் என்ற சித்தர் எனப் பலர் கூறுவர்; இந்தச் சித்தர் மன்னரை நோக்கி, "மன்ன! கவலை ஒழிக. கரூர்த் தேவரை இங்கே அழைப்பிக்கின்றேன். அவர் சேரநாட்டு மலையில் வாழ்கின்றார்" என்றார். தமது யோக சக்தியால் கரூர்த்தேவருக்குச் செய்தி அனுப்பினர். கரூர்த் தேவர் உடனே அங்கு வந்து, தமது வாயின் தாம்பலத்தையே மருந்தாக உபயோகித்துச் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்தனர்; உருக்கு வார்த்ததுபோலப் பந்தனம் ஆயிற்று. அதைக் கண்ணுற்ற அரசன் ஆனந்தக் கடலில் மூழ்கினன்.

இராஜராஜன் கட்டிய இவ்வழகுக் கோயில் சிவகங்கைச் சிறு கோட்டையின் தென்பாதியில் இருக்கிறது. இதைப் பலர் அறிவர். இக்கோட்டையின் அகழியைக் கடந்து சிறிது தூரம் சென்றால், அழகிய கோபுரம் ஒன்று தோன்றும். அதனையும் கடந்து பின்னும் சிறிது தூரம் செல்லுங்கால் அகன்ற கோபுரம் ஒன்று தோன்றும். இதனையும் இராஜராஜனே கட்டினன். இக்கோபுரத்தைக் கடந்தால் சுமார் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் உடைய பெரிய சபைபோன்ற பெருவெளி முற்றம் ஒன்று தோன்றும். இங்குப் பெரிய நந்தி ஒன்று செய்குன்றின்மீது படுத்திருக்கின்றது. இதுவே சிவ பெருமானின் வார்தியாகிய திருநந்தி தேவன்.

தெற்கு வாயிலுக்கு 'விக்கிரமன் திருவாயில்' என்னும் பெயர் வழங்குகின்றது. தென்வாயிலின் கிழக்குப் பக்கத்தில் கலைவாணியின் உருவமும் வெகு அழகாக அமைந்திருக்கக் காணலாம். முன்னுளில் திரு அனுக்கன் திருவாயிலுக்கு, இரு பக்கங்களிலும் அமைந்த படிக்கட்டுகள் வழியாகவே செல்லவேண்டும். இராஜராஜன் கோயில் கட்டிய பொழுது இந்தப் படிக்கட்டுகளே இருந்தன. இந்த வாயிலுக்கு எதிரில் இப்பொழுது காணப்படுகின்ற படிக்கட்டுகள் சரபோஜி மன்னருடைய காலத்தில் கட்டப்பட்டவை. இராஜராஜன் சிவபக்தனுக இருந்த போதிலும், அவனுடைய மத நோக்கம் மிக விசாலமானது என்பது இப்பெரிய கோயிலில் பல பாகங்களிலும் காணப்படும் சிற்பங்களாலும், சிலைகளாலும் தெளிவாகும். கோயில் விமானத்தின் தென் பக்கத்து மதிலில் சோழ வீரரது உருவங்களையும், பிள்ளையார், திருமால், பிக்ஷாடனர், சூலதேவர், தக்ஷிணுமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர் முதலிய தெய்வங்களின் சிலை உருவங்களையும் காணலாம். மேற்குப் பக்கத்து மதிலில், இலிங்கோற்பவர், அர்த்தநாரீச்வரர் முதலிய சிலையுருவங்கள் காணப்படுகின்றன. வடபாகத்தில், கங்காதரர், கலியாண சுந்தரர், மகிடாசுரமர்த்தினி என்பவர்தம் சிலை உருவங்கள் அழகாக விளங்குகின்றன. திருச்சுற்று மண்டபத்தின் தென்பாகத்தைத் தவிர மற்றைப் பாகங்களில் பெரிய இலிங்கங்களும், நாக கன்னிகைகளின் பதுமைகளும், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் முதலானேரின் திருமேனிப் படிமங்களும் பதித்திருக்கக் காணலாம். எண்டிசைப் பாலகர்களுக்குத் தனித்தனியே கோயில்களும் இங்கே காணப்படுகின்றன. கோயிலின் தென்பக்கத்திலுள்ள விக்கிரமன் வாயிலில் பௌத்தச் சிலைகள் சில காணப்படுகின்றன. வடக்குக் கோபுரத்தின் கீழ்ப் பாகத்தில் ஓர் ஐரோப்பியரது உருவம் காணப்படுகின்றது.

இக் கோபுரத்தைக் கட்டிய சிற்பி, சோழ தேசத்தை முன்னும் பின்னுமாக அரசாண்ட வகுப்பினரை உருவங்களால் குறித்திருக்கிருன் என்று சிலர் கூறுகின்றனர். பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் இரகுநாத நாயக்கர் என்ற அரசர் தஞ்சையை ஆண்டுவந்தார். அவருடைய சபையில் 'ரோலண்டு கிரேப்' என்னும் ஐரோப்பியன் ஒருவன் இருந்தான். அவன்

ஈஸ்டு இந்தியா கம்பெனியாரின் தலைவன். வடக்குக் கோபுரத்தின் கீழ்ப்பக்கத்தில் காண்கின்ற மேலை நாட்டானது வடிவம் அவனது உருவச் சிலைதான் என்று சிலர் கூறுகின்றனர். பதின் மூன்றும் நூற்றாண்டில் இந்தியாவுக்கு யாத்ரீகனாக வந்த வெனிஸ் நகரத்தானாகிய "மார்க்கோபோலோ"வின் உருவச்சிலை என்று மற்றும் சிலர் கூறுவர். இராஜ ராஜனது காலத்தில் கிரேக்க அரபி நாடுகளினின்று தமிழகத்துக்கு வியாபாரம் செய்தற் பொருட்டு வந்தவர்களைச் சோனகர் எனவும், யவனர் எனவும் நம்முன்னோர் அழைத்து வந்தனர். அச்சோனகருள் ஒருவனுடைய உருவச்சிலை என்று பின்னும் சிலர் கருதுகின்றனர். இதன் உண்மை இன்றளவும் தெரிதற் கரிதாகவே உள்ளது.

இங்ஙனம் பற்பல அழகுகளோடு விளங்கும் இக்கோயிலை, இராஜ ராஜன் மேலும் அழகு செய்யத் தேர்ச்சி பெற்ற சித்திரக் காரர்களை நியமித்தான். அழகுக் கலையிலே இசையும் நடனமும் முக்கிய அங்கங்களாக அமைவன. ஆகையால், நாடோறும் கோயிலில் நடனம் செய்தற்குத் தேர்ந்த நடனமாதர்களை நியமித்தான்; வாத்தியங்கள் வாசிப்பதில் தேர்ந்தவருள் பலரைக் கோயில்பூஜை நடைபெறும் பொழுது வாத்தியங்கள் வாசிக்க வைத்திருந்தான்; திருவிழா நிகழுங் காலத்தில் நாடகக் கலை வளர்ச்சிக்கு ஏற்ற வசதிகளையும் செய்தான். போரில் பகைவரிடமிருந்து கொணர்ந்த பொன்னையும் நவரத்தினங்களையும் பெரிய கடவுள்முன் கொட்டிக் குவித்தான். அழகே கடவுள். அவ்வழகை இசைக் கலையிலே, சிற்பக் கலையிலே, ஓவியக் கலையிலே கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கியவர்கள் நமது நாட்டுப் பக்தர்கள். அவர்களில் இராஜராஜ சோழனே முதன்மையாக விளங்குபவன். அழகுக்காக அவன் கட்டிய பெரிய கோயிலை நாம் பார்க்கின்ற போதெல்லாம் இராஜராஜனது உள்ளத்தின் அழகையே காண்கிறோம்.

பயிற்சி

1. இராஜராஜன் சிற்பக்கலையில் பெரு விருப்புடையவன் என்பதை யாங்ஙனம் உணரலாம்?
2. நந்தியின் தோற்றம் எவ்வாறுளது?

3. நந்தியைப் பற்றித் தஞ்சைப் பெருமக்கள் கூறும் கற்பனைக் கதை யாது?
4. பெருவுடையார் கோயிலுக்குரிய மூன்று கோபுர வாயில்கள் யாவை?
5. இக் கோயிலின் பல பாகங்களில் காணப்படும் சிலையுருவங்கள் யாவை?
6. வடக்குக் கோபுரத்தின் கீழ்ப்பக்கத்தில் காணப்படும் மேலை நாட்டானது வடிவத்தைப்பற்றி யாது கூறுகின்றனர்?
7. இவ்வழகுக் கோயிலை மேலுமழகுறச் செய்ய இராஜராஜன் என்னென்ன செய்வித்தான்?

4. சர். சி. வி. ராமன் ஒளி

[திரு: R. K. விசுவநாதன் M.A. அவர்கள்]

ஒளி என்னுஞ்சொல்லை இரண்டுவிதமான பொருள்களில் வழங்குவதுண்டு. ஒன்று தண்ணீரிலே உண்டாகும் புலன் உணர்ச்சி. மற்றொன்று புலனுக்கு விஷயமாகிய பொருள். பௌதிக இயலில் பெரும்பாலும் இந்த இரண்டாவது பொருளே கையாளப்பட்டு வருகின்றது. ஒரு பொருளிலிருந்து புறப்பட்டு வரும் ஒளி நமது கண்ணில் படும்போது அப்பொருள் நமது கண்ணுக்குப் புலனாகிறது என்று சொல்லுகிறோம். பொருள்களில் சிலவற்றைச் சுயம் பிரகாசமான பொருள்கள் என்றும் மற்றவற்றைச் சுயம்பிரகாசம் இல்லாத பொருள்கள் என்றும் கூறுவது வழக்கம். அதன் கருத்து என்னவெனில், சுயம் பிரகாசமான பொருள்கள் தாமே ஒளியிடும் ஒளியினால் புலப்படுகின்றன. மற்றப் பொருள்கள் அவைகளின் மீது விழும் ஒளியைச் சிதறச் செய்து, அவ்வாறு சிதறிய ஒளி நமது கண்ணிலே படுவதால் அவைகள் நமக்குப் புலனாகின்றன என்பதுதான். சூரியனிடமிருந்து வெப்பம், வெளிச்சம் ஆகிய இரண்டையும் நாம் பெறுகிறோம். இவை இரண்டும் கிரணங்களாகவே நம்மை வந்தடைகின்றன. இந்தக் கிரணங்களை யெல்லாம் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் ஈதர் (Ether) என்று சொல்லுவார்கள்.

குளத்திலே ஒரு கல்லை விட்டெறிந்தால், அது விழுந்த இடத்திலிருந்து அலைகள் தோன்றி நீர்ப்பரப்பு முழுவதும் பரவுகின்றதை எல்லோரும் பார்த்திருக்கலாம். சிறிது நேரத்திலே இவை அடங்கிவிடுகின்றன. ஆனால், ஒரு குச்சியைத் தண்ணீரில் அமிழ்த்தி அதை ஆட்டிக்கொண்டே இருந்தால் அலைகள் விடாமல் உண்டாகிப் பரவிக் கொண்டிருப்பதைக் காணலாம். தண்ணீர்ப் பரப்பின்மீது ஒரு சிறு கெட்டித்துண்டை மிதக்க விட்டால் அதனடியில் அலைகள் செல்லும்போது அத்துண்டு மேலும் கீழுமாக ஆடுவதைக் காணலாம்; அது தன்னிடத்தை விட்டுச் சிறிதும் நகர்ந்து செல்வதில்லை யென்பதையும் பார்க்கலாம். இதனால் ஓர் உண்மை வெளிப்படுகிறது. அதாவது; அலைகள் நாற்புறமும் பரவிச் சென்றாலும் தண்ணீர் அவ்வாறு பரவி ஓடுகிற

தில்லை என்பதும், ஒவ்வொரு நீர்த்துளியும் தானிருக்கும் இடத்திலேயே நின்றுகொண்டு மேலுங்கீழுமாக மட்டுமே ஆடுகின்றது என்பதுமே அவ்வுண்மையாம். ஒவ்வொரு துளியும் ஒரு 'செகண்டி'லே இயற்றும் துடிப்புகளின் எண்ணிக்கையை அந்த அலையின் அதிர்வு எண் (Frequency) என்று சொல்லுவார்கள் ; நீர்ப்பரப்பில் ஒரே மாதிரியாகத் துடிக்கும் இரண்டு அடுத்தடுத்துள்ள துளிகளிடப்பட்ட தூரத்தை அலையின் நீளம் என்று கொள்வார்கள்.

மேற்கூறிய நீர் அலைகளைப் போல ஒளிக்கிரணங்கள் எல்லாம் விசும்பில் ஏற்பட்ட அலைகள் என்றும், இவ்வலைகள் மின்காந்த இயல்பு வாய்ந்தனவென்றும் காட்டப்பட்டன. தவிர, வெப்ப அலைகள், ரேடியோ அலைகள், (Radio waves) x — கிரணங்கள் எல்லாம் ஒளி அலைகளைப் போல மின்காந்த அலைகளே என்றும், அவைகளுக்குள்ள வேற்றுமை அலை நீளத்திலேற்பட்ட வேற்றுமையே ஒழிய வேறில்லை என்றும் அறியப்பட்டது. இம்மின்காந்த அலைகள் மாறாத ஒரே கதியோடு செல்லுகின்றன. இந்தக் கதி ஒரு செகண்டிற்கு 1,86,000 மைல் ஆகும்.

சூரிய வெளிச்சத்திலே இருக்கும் ஒரு பொருளை முப்பட்டைக் கண்ணாடி வழியாகப் பார்த்தால் அப்பொருளின் விளிம்புகளிலே பல வர்ணங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். இதிலே தோன்றும் நிறங்களின் வரிசை வானவில்லில் உள்ளதைப்போல் இருக்கும். ஓர் இருண்ட அறையினுள்ளே ஒரு சிறு துவாரத்தின் வழியாகச் சூரியனது ஒளியைப் புகச் செய்து அந்த ஒளிக்கற்றையின் வழியிலே ஒரு முப்பட்டையையும், அதன்பின் ஒரு திரையையும் வைத்து நியூட்டன் என்னும் பேரறிஞர் திரையின் மீது பல வேறு நிறங்களைக் கொண்டதொரு நீண்ட நிறமாலையை (Spectrum) முதன் முதலில் அமைத்துக் காட்டினார் ; இம்மாலையின் ஒரு முனையில் செந்நிறமும், மற்றொரு முனையில் ஊதா நிறமும், இவற்றின் இடையே ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவுரி முதலிய பலவேறு நிறங்களும் தோன்றுவதைக் கண்டுணர்ந்தார் ; அதாவது வெண்ணிறமான சாமானிய ஒளி பல வேறு நிறங்களைக் கொண்ட ஒளிகளின் சேர்க்கை என்று காட்டினார். இதிலிருந்து

ஊதா முதல் சிவப்பு வரையில் உள்ள ஒளி மட்டுமே நம்முடைய கண்ணுக்குப் புலனாகிறது என்று அறிகின்றோம். இந்த இரண்டிற்கும் இடையிலுள்ள ஒவ்வொரு ஒளிக்கும் அதற்குத்தகுந்த அலைநீளம்' ஒன்றுண்டு என்றறியலாம்.

சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமனமாகும் போதும் செந்நிறமாகத் தோன்றுவதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். இதன் காரணம் என்னவெனில் சூரியன் அவ்வாறு தாழ்ந்து இருக்கும் பொழுது அதனுடைய கிரணங்கள் பூமிக்குச் சற்று உயரம் வரையில் வியாபித்திருக்கும். வாயு மண்டலத்தில் (Atmosphere) வெகுதூரம் வந்து நம்மை அடையவேண்டியிருக்கிறது. அதன்பொருட்டு அதிலிருந்து வரும் வெண்ணிறமான ஒளி வாயு மண்டலத்தில் இருக்கும் துகள்களில் மோதுண்டு சிதறப்படுகின்றது. வெண்ணிறமான ஒளியில் அடங்கியுள்ள எல்லா வர்ண ஒளிகளும் ஒரே அளவாகச் சிதறப்படுவதில்லை. அவைகளில் செந்நிற ஒளியைத் தவிர மற்ற ஒளிகள் அனைத்தும் நாம் பார்க்கும் திசைக்கு அப்புறமாகச் சிதறப்படுவதால் நமக்குச் சூரியனுடைய பிம்பம் செந்நிறமாகத் தோன்றுகிறது என்று அறியப்பட்டது. கடல் நீரும் ஆகாயமும் நீல நிறமாகத் தோன்றுவதும் இதே காரணம் பற்றிதான். பிரதிபலித்தலை உண்டாக்கும் பொருள்களின் அளவைகள், ஒளி அலைகளின் நீளங்களைவிடப் பன்மடங்கு அதிகமாக இருக்கும்பொழுதுதான் சாதாரண பிரதிபலிக்கும் விதிகள் அனுசரிக்கப்படுகின்றன. ஒளி மிகச் சிறிய பொருள்களைத் தாக்கும்பொழுது பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகள் வேறுபடுகின்றன. எனவே இதற்கு 'ஒளி முறிவு' எனப் பெயரிட்டார்கள். வாயு மண்டலத் துகள்களினால் முதலில் சூரியனுடைய ஒளியில் ஊதாப்பகுதியும், அவுரிப் பகுதியும் சிதறப்படுகின்றன. எஞ்சிய பகுதி மறுபடியும் சிதறப்பட்டு நீலநிற ஒளியைத் தவிர மற்றெல்லா ஒளிகளும் நீக்கப்படுகின்றன. அதனால்தான் ஆகாயம் நீல நிறமாகத் தோன்றுகிறது என்று அறியப்பட்டது. வாயு மண்டலத் துகள்கள் அனைத்தும் பெரியதாகவே இருக்குமானால், வெண்ணிற ஒளியில் ஒரு மாறுதலும் உண்டாகாமல் ஆகாயம் வெண்ணிறமாகவே தோன்றும். நீர்ப் பரப்பில் ஆகாயம் பிரதி

"தென்னிந்திய ஸயன்ஸ் அசோசியேஷன்" மேடையில் பேசும் பொழுது இதை வெளியிட்டார். உடனே இச்செய்தி எங்கும் பரவிற்று. அமெரிக்க நாட்டிலுள்ள பிரபல விஞ்ஞானியான "ஆர். டபிள்யூ. வுட்" என்பவர் முதன்முதலில் ராமன் கண்டு பிடித்ததைப் பரிசோதித்து அது 'சரி' யென்று உலகத்துக்கு நிரூபித்துக் காட்டினார்.

இவ்வாறு ஒளி புகும் பொருளினால் உண்டாக்கப்பட்ட ஒளி அப்பொருளைச் சார்ந்திருக்கிறதென்றும், எல்லாப் பொருள்களும் தத்தமக்குரிய ஒளியை உண்டுபண்ணுவதாகவும் அறியப்பட்டன. அதாவது, இந்தப் புதிய ஒளி, பொருள்களின் அறிகுறியாக இருப்பது தெரியலாயிற்று. அத்தகைய ஒளியை இவர் கண்டறிந்ததன் பொருட்டு அதற்கு "ராமன் ஒளி" என்று பெயரிடப் பட்டிருக்கிறது. பதார்த்தங்களின் மூலக் கூறுகளைப் பற்றிய விஷயங்களை அறிவதற்கு இவர் கண்டுபிடித்த ஒளி பெரிதும் பயன்பட்டு வருகின்றது.

பயிற்சி

1. ஒளி என்னுஞ் சொல்லை எப்பொருள்களில் வழங்குகிறோம்?
2. ஈதர் (Ether) என்று சொல்லப்படுவது யாது?
3. நீர்ப்பரப்பின் மீது மிதக்கவிடப்படும் கெட்டித் துண்டு தன்னிடத்தை விட்டுச் சிறிதும் நகராமல் மேலுங் கீழும் ஆடுவதால் அறியப்படும் உண்மை யாது?
4. "நியூட்டன்" என்னும் பேரறிஞர் எதனைக் கண்டுணர்ந்தார்? அதனால் அறியப்படும் உண்மை யாது?
5. சூரியன் தோன்றும் போதும் மறையும் போதும் செந்நிறமாகத் தோன்றக் காரணம் என்ன?
6. ஒளிமுறிவு என்றால் என்ன?
7. ஆகாயம் நீலமாகத் தோன்றுகிறது. ஏன்?
8. பேராசிரியர், சர். சி. வி. இராமன் கண்டுபிடித்த உண்மை யாது?

5. காரைக்குடி ரசாயன ஆராய்ச்சி நிலையம்

காரைக்குடியில் உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் சமீபத்தில் திறந்துவைத்த மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சி நிலையம் ஆரம்பமானதிலிருந்து, இந்தியாவின் தொழில் துறை வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகி விட்டதாகக் கருதப்படுகிறது.

மின்சார சக்தி, ரசாயனவேலை முறைகள் மூலம் உற்பத்தியாகலாம். அதேபோல் மின்சார சக்தியை ரசாயன வேலை முறைகளுக்கு உபயோகிக்கவும் செய்யலாம். இரண்டாவது கூறிய ரீதியில்தான் மின்சார ரசாயனம் தொழில் துறை வேலை நுட்பங்களில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. விசேஷமாகச் சமீப காலத்தில் சில வருஷங்களில் ஏற்பட்டுள்ள அபார அபிவிருத்திகளை அனுசரித்து அஃது அவ்வாறு அமைந்திருக்கிறது.

மின்சார ரசாயனத் தொழில்கள் மிகவும் பரந்துள்ளன. அலுமினியம், மக்னீஷியம், துத்தநாகம், மின்சார ஈயம், காஸ்டிக் சோடா, க்ளோரின், கால்ஷியம் கார்பைட், ரசாயன உரங்கள், பட்டசிலை வகையறா, விசேஷ எஃகுகள், கரி கிராபைட் பொருள்கள், சாய இடைப்பொருள் முதலிய தொழிலாதார சாதனங்கள் தயாரிக்கும் பல தொழில்கள் அதில் அடங்கும். இந்த ஆதார சாதனங்கள் விமானம், விமானத் தொழில், மோட்டார், ரயில்வே, விவசாய யந்திரக் கருவிகள், காகிதம், செயற்கைப் பட்டு முதலிய பல புதிய தொழில்கள் ஏற்படுவதற்கு ஆரம்பக் கட்டமாக இருக்கின்றன.

இதர தொழில் முறைகளின்படி தயாரிக்கக் கூடிய பொருள்கள் விஷயத்திலும் கூட, பல்வேறு காரணங்களுக்காகவும் மின்சார ரசாயனத் தொழில் முறைதான் சிலாக்கியமாக மேற்கொள்ளப்படுகிறது. உதாரணமாக விசேஷ எஃகும், எஃகுக் கலவைகளும் தயாரிப்பதற்கு மின்சார உலைகள் உபயோகிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதால் உலோகத் தொழிலுக்குப் போதுமான கரியை மிச்சப்படுத்தி, நாம் அத்தொழிலுக்கே கொடுப்பதற்குச் சாத்தியமாகிறது. ப்ளாஸ்ட் பர்னஸ் உலைகளில் துத்தநாகத்தைப் பக்குவப்படுத்துவதால் துத்தநாகம் அதிக அளவில் ஆவியாகப் போவதை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆகையால் செம்பும்,

துத்தநாகமும் கலந்துள்ள ஒரு உலோகக் கலவையான பித்தளையை சாதாரண முறையில் தயாரிக்கும்போது இவ்வாறு துத்தநாகம் ஆவியாகப் போவதனால் அக்கலவையில் உள்ள உலோகங்களின் விகிதத்தை ஒரு குறிப்பிட்ட அளவில் வைத்துக் கொள்ள முடிவதில்லை. மேற்கூறிய சந்தர்ப்பங்களில் எல்லாம் மின்சார ரசாயன முறையை உபயோகிப்பதால் மற்ற முறைகளைவிடத் திருப்தியான பலன்களை அடையலாம்.

(தேசீயத் திட்டங்களுடன் தொடர்பு)

லாபகரமான விலையில் மின்சார சக்தி கிடைப்பதை அனுசரித்துத்தான் மின்சார ரசாயனத் தொழில்களின் வெற்றி அமைந்திருக்கிறது. மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் ஆரம்பித்துள்ள அல்லது ஆரம்பிக்கப் போகின்ற பிரதான நீர்ப்பாசன ஜல மின்சாரத் திட்டங்களின் மூலம் தொழில் துறைக்குச் சமீப எதிர்காலத்தில் ஏராளமான மின்சாரம் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியாவில் பல் வேறு மின்சார ரசாயனத் தொழில்களுக்கு அவசியமாய் இருக்கக்கூடிய எத்தனையோ வகையான மூலப் பொருள்கள் கிடைக்கிறபடியால் அத்தகைய தொழில்களை ஏற்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் நல்ல வசதி இருக்கிறது.

மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சி நிலையமானது டாக்டர், எஸ். எஸ். பட்நாகர் மேற்பார்வையில், விஞ்ஞானத்தொழில் ஆராய்ச்சிக் கழகம் ஏற்படுத்திவரும் ஆராய்ச்சி நிலையத் தொடர் வரிசைகளில் புதிதாக அமைக்கப் படுவதாகும். தொழில் துறையைச் சமசீராக அமைப்பதற்கென ஏற்படுத்தப்படுகிற இவ்வாராய்ச்சி நிலையத்தொடர் வரிசைகளுக்கு இந்தியத் தொழில் துறையாளர்களின் கணிசமான ஆதரவு கிடைத்திருக்கிறது. காரைக்குடியில் மின்சார ரசாயன ஆராய்ச்சி நிலையம் ஏற்படுவதிலிருந்து இது புலனாகும். இதற்கு டாக்டர் அழகப்பச் செட்டியார் 15 லட்ச ரூபாய் நன்கொடையும் 300 ஏகர் நிலமும் இனமாக அளிக்க முன்வந்திருக்கும் உதவியையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 1948, ஜூலை 25-ஆம் தேதி இந்தியப் பிரதமமந்திரி ஸ்ரீ. ஜவாஹர்லால் நேரு அஸ்திவாரக் கல் நட்டார். இதற்கெனத்

திட்டக் கமிட்டி இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உள்ள பிரதான மின்சார ரசாயனத் தொழில் ஸ்தாபனங்களுக்கும் நிபுணர்களுக்கும் அனுப்பிய வினாப் பத்திரத்தின் மூலம் கிடைத்த யோசனைகளைத் தழுவித்தான் இந்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையத்தை நிர்மாணிக்க ரூ. 35 லட்சம் செலவாகியிருக்கிறது.

இந்நிலையத்தின் கட்டடங்களின் மொத்த ஸ்தல விஸ்தீரணம் சுமார் 60,000 சதுர அடியாகும். தொழில் பட்டறை கனரக ஆராய்ச்சிப் பரிசோதனைச் சாலைகள் 25% விஸ்தீரணத்தையும், சிறிய அளவில் பரிசோதிக்கும் ஆராய்ச்சிச் சாலைகள் 32% இடத்தையும், நூல்நிலையம், பிரசங்க அரங்கம், மகாநாட்டு அறைகள் ஆகியவை 20% இடத்தையும், பொதுக் காரியாலயம் காட்சியறை முதலியவை 23% இடத்தையும் வியாபித்து நிற்கின்றன.

(பல்வேறு பகுதிகள்)

இந்நிலையத்தில், மின்சார உலோக வேலை, மின்சார உலைப் பொருள்கள், மின்சார செல்கள், மின்சார ரீதியில் உலோகங்களைப் படியவைக்கும் வேலை முறை, அதைச் சார்ந்த இதர வேலை முறைகள், வாயுக்கள் சம்பந்தமான மின்சார ரசாயனம் ஆகிய பல வேலை முறைகளைக் கவனிக்கும் பிரதானப் பிரிவுகள் பல இருக்கும். சாதாரணமாகப் பரிசோதனைச் சாலைகளில் இருக்கக்கூடிய வசதிகள் ரசாயன அளவுக் கருவிகள் முதலியவைகளோடு கூட சில விசேஷ வேலை வசதிகளும், சாதனங்களும் அங்கே இருக்கும். உதாரணமாக திரவக் காற்று தயாரிக்கும் சாதனம், எக்ஸ்ரே சிதற வைப்பு இயந்திரம், ஸ்பெக்ட்ரோ கிராபிக், மெட்லோ கிராபிக் சாதனங்கள், ஒரே உஷ்ணநிலை அறை, நுட்பப் பகுப்பு ஆராய்ச்சி சாதனம், ப்ளோரின் தயாரிப்பது முதலான விசேஷ காரியங்களுக்கான மின்சார பாட்டரிகள், அதி நுட்பக் கருவிகளை மராமத்து செய்வதற்கும் ஒழுங்கு படுத்துவதற்குமான சாதனம், ஆகியவைகளும்கூட அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டும் உள்ளன. ஏற்கெனவே பொது வேலைப்பட்டறை, பிரசங்க அரங்கம், நன்கமைந்த நூல் நிலையம் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மின்சார ரசாயன ஆராய்ச்சியில் ஆவல் உள்ளவர்களுக்குத் தேவையான பொருள்களையும், சாதனங்களையும் காட்சிக்கு வைப்

பதற்காக ஒரு கண் காட்சி அறைக்கும் இடவசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு பகுதியும் ஒரு அஸிஸ்டெண்ட் டைரக்டர் பொறுப்பில் இருக்கும். அவருக்கு 14 அல்லது 15 ஆராய்ச்சியாளர்கள் உதவியாக இருப்பார்கள். சோதனைக் குழாய் ஆராய்ச்சியில் ஆரம்பித்து மாதிரி உற்பத்திக்கட்டம் வரையில் இங்கே ஆராய்ச்சிகள் நடக்கும்.

மின்சார ரசாயனம் இதரபல ஆராய்ச்சிகள் சந்திக்கும் எல்லையில் உள்ள ஒரு பொது ஆராய்ச்சியாகும். எரிபொருள் தொழில் நுட்பம், கண்ணாடி, மட்பாண்ட ஆராய்ச்சி, உலோக வேலை ஆராய்ச்சி, பௌதிக ரசாயனம், கரி மூலரசாயனம், மின்சார எஞ்சினியரிங் ஆகியவை மின்சார ரசாயனத் துறையுடன் தொடர்புள்ளவை என்பதோடுகூடச் சிலசில விஷயங்களில் ஒன்றோடொன்று கலந்தே இருப்பவையாகும். இதர எல்லை விஷயங்களைப் போலவே மின்சார ரசாயன ஆராய்ச்சியிலும் புதிய முறைகள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலம் தற்காலத்தொழில்களின் பொருளாதாரமும் பெரிதும் மாறுபடக் கூடிய அளவுக்குப் புது முறைகளைக் கண்டுபிடிக்க வசதி இருக்கிறது. புதிய சாதனங்களை உபயோகிக்கும் முறையும் பெரிதும் மாறுபடக்கூடிய அளவுக்கு இவ்வாராய்ச்சிகள் பயன்படலாம்.

பயிற்சி

1. இந்தியாவின் தொழிற்றுறை வரலாற்றில் புதிய அத்தியாயம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?
2. மின்சார ரசாயனத் தொழில்கள் என்பதில் எவையெவை அடங்கியுள்ளன ?
3. இதர வேலைகளுக்கும் மின்சார ரசாயன வேலை முறையே சிறந்தது என்பதனை விளக்குக.
4. காரைக்குடி மத்திய மின்சார ரசாயன ஆராய்ச்சி நிலையம் தோன்றிய விதத்தையும் அதன் அமைப்பையும் விளக்குக.
5. அதன் பல் வேறு பகுதிகளைக் குறிப்பிடுக.

6. குடிசைக் கைத்தொழில்கள்

[திரு. சா. அமிர்தலிங்கனார் அவர்கள்]

நம் நாட்டில் பெரும்பாலாரான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். விவசாயத்தில் ஈடுபட்ட மக்களுக்கு ஓர் ஆண்டில் ஏழு அல்லது எட்டு மாதங்களே பெரும்பாலும் வேலையிருக்கும். அப்பொழுது அவர்கள் தங்களுடைய உழைப்பால் நாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கின்றார்கள். மற்ற நாட்களிலும் பருவமழை தவறிப் பயிரிட முடியாத காலத்திலும் அம்மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயைத் தேடிக்கொள்ள வேறு ஏதேனும் ஒரு தொழிலைச் செய்து பிழைப்பர். அவ்வாறு அவர்கள் ஓய்வு நேரங்களில் செய்யும் தொழில்கள் 'குடிசைக் கைத்தொழில்கள்' என்று சொல்லப்படுகின்றன.

நம் நாட்டிலே இரண்டு கோடிக்கு மேற்பட்ட மக்கள் குடிசைத் தொழிலாளராக இருக்கின்றனர். அவர்கள் செய்யும் தொழில்கள் நெசவு நெய்தல், சமக்காளம் தயாரித்தல், கயிறு திரித்தல், கூடை முடைதல், தேனீவளர்த்தல் முதலானவைகளும், தந்தம், சந்தனமரம் முதலியவற்றில் அழகான வேலைப்பாடமைந்த உருவங்களை அமைத்தலும் மற்றும் பிறவுமாகும். இவற்றுள் நெசவுத் தொழில் நமது நாட்டின் சிறப்பைப் பாரிலுள்ள மக்கட்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே விளக்கி வந்த பழைய அரிய தொழிலாகும். இன்றும் மைசூர், காஞ்சிபுரம், காசி முதலான இடங்களில் தயாரிக்கப்படுகின்ற பட்டு ஆடைகள் எல்லோராலும் விரும்பப்படுவனவாகும். சரிகை வேலைப்பாடமைந்த உடைகள் காண்போர் மனதைக் கவருவனவாகும். இத்தகைய தொழில் வளம்பெற்ற மக்கள் இடைக்காலத்தில் அன்னியரின் ஆதிக்கத்தால் அருமை இழந்து அல்லலுற்றனர்; மீண்டும் ஓரளவு முன்னேற்றம் பெற்றுவருகின்றனர்.

ஆலைகளின் மூலம் தயாரிக்கப்படும் உடைகள் பிறநாடுகளிலிருந்து அதிகமாக வெளிவரவே நம் நாட்டு நெசவுத் தொழில்

நலிவுற்றது. இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ஆடைகள் கைநெசவு ஆடைகளைவிட விலை குறைந்திருந்த காரணத்தால் மக்கள் அவற்றை வாங்கத் தொடங்கினர்; கைநெசவு சீர்கேடு அடையும் நிலைமை ஏற்பட்டது. அந்த நிலையிலேதான் நாட்டுத் தொழில் வளரவும், ஏழைமக்கள் இன்பமுறவும் குடிசைத் தொழில்களை ஆதரிக்க வேண்டுமென்ற கொள்கையோடு 'கதரியக்கம்' என்பதை நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அடிகள் ஆரம்பித்தார்கள். நாமே நூல் நூற்று ஆடை நெய்து உடுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் போதித்தார். வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகின்ற ஆலைத்துணிகளை எவரும் தொடக்கூடாது; ஒவ்வொருவரும் நம் நாட்டிலே நம்மவர்களாலேயே நூற்கப்பட்டு நம்மவர்களாலேயே நெய்யப்படுகின்ற ஆடைகளையே உடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்தினர். அதனால் சிலர் அயல் நாட்டுத் துணிகளை வாங்குவதை நிறுத்தினர். பின், நாளடைவில் நம் நாட்டிலே நூல் நூற்கும் இயந்திரங்கள் தோன்றின. அவ்வியந்திரங்களில் நூற்கப்படும் நூலை வாங்கிக் 'கைத்தறியில்' நெய்து விற்கத் தொடங்கினர். இம்முறை இப்பொழுது அதிகமாகப் பரவியுள்ளது. காந்தியடிகளின் கருத்துப்படி ஒவ்வொருவரும் தாமே ராட்டையினால் நூற்கத் தொடங்கினால் அதன் மூலம் நம் நாட்டுத் துணிப்பஞ்சத்தை ஒருவாறு ஒழித்து விடலாம். ஆனால், சிலர், உலகமெல்லாம் விஞ்ஞானத்துறையிலே முன்னேற்றம் பெற்று விளங்கிவரும்போது பழங்கால நிலைமைக்கு மக்களை அழைத்துக் கொண்டு செல்வது சிறந்ததாகாது என்று கருதுகின்றனர். கைநெசவால் இலட்சக்கணக்கான மக்கள் பிழைக்கின்றனர் என்பதை நாம் மறத்தல் கூடாது.

தென்னாட்டிலே பவானி முதலிய இடங்களில் உள்ள மக்கள் நமக்குப் பயன்படுகின்ற அழகான சமக்காளங்களையும், தரை விரிப்புக்களையும் நெய்கின்றனர். இத்தொழில் அவர்கட்கு நல்ல வருவாயைக் கொடுப்பதுடன் அவர்களைச் சோம்பல் அற்றவர்களாகவும் செய்கிறது.

அடுத்தபடியாக நம் நாட்டில் பல இடங்களிலும் செய்யப்பட்டு வருகின்ற தொழில் கயிறு திரித்தல், கூடை முடைதல்

முதலானவை. தேங்காய் மட்டைகள், பனை மட்டைகள், கற்றாழைச் செடிகள், காசினிச் செடிகள் முதலியவற்றிலிருந்து நார் எடுத்து வலிமை மிக்க கயிறுகளைத் திரித்து வருகிறார்கள். நல்லவர்க்கு உவமையாகச் சொல்லப்படுகின்ற தென்னை மரம் மக்களுக்குப் பலவகையிலும் பயன்படுகிறது. அதன் காய்களின் மேலிருக்கும் மட்டைகளை உரித்துத் தண்ணீரில் ஊறவைத்துப் பதப்படுத்திய பிறகு அவற்றிலிருந்து நார் எடுத்து வலிமை பொருந்திய கயிறுகளைத் தயாரிக்கின்றனர். சிறு தும்பு முதல் தேரிழுக்கப் பயன்படுகின்ற பெரியவடம் வரையில் அந்த நாரினால் செய்யப்படுகின்றன. அதுபோலவே பனைமரத்தின் மட்டையை வெட்டி அதிலிருந்தும் நார் தயாரிக்கின்றனர். கற்றாழை மட்டைகளிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிப்பது மட்டும் அல்லாமல் 'பிரஷ்' முதலானவைகளும் செய்கின்றார்கள். காசினிச்செடி என்னும் ஒருவகைச் செடியிலிருந்து மிக நீளமான நார் தயாரித்துக் கயிறு திரிக்கின்றார்கள். காசினிச் செடி, ஆறு அல்லது ஏழு அடி உயரம் வளரும். அதன் தண்டுகளை எடுத்துத் தண்ணீரில் ஊறவைத்து மேற்பட்டைகளை நீக்கினால் நார் உண்டாகும். கற்றாழை நாரும், காசினி நாரும் கவரிமான் மயிரைப் போல் வெள்ளையாய் இருக்கும். சணலைக்கொண்டு நார் எடுத்துக் கோணிப்பை, கித்தான் முதலான பல பொருள்கள் செய்யப்படுகின்றன. இவை இயந்திரத்தின் மூலம் இப்பொழுது செய்யப்படுகின்றன.

மூங்கில், பிரம்பு இவற்றைக் கொண்டு அழகான கூடைகளும், மேஜை நாற்காலிகளும், தொட்டில் முதலானவைகளும் செய்யப்படுகின்றன. இவை மக்களுடைய வாழ்க்கையில் பயன்படுகின்ற முக்கியமான பொருள்களாகும்.

இவ்வாறு பல தொழில்கள் நம் நாட்டிலே கைகளால் செய்யப்படும் குடிசைக் கைத்தொழில்களாகச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. கல்வி பயிலும் இளைஞர்கள் வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டும் நாட்டம் செலுத்தாது கைத்தொழிலிலும் கவனம் செலுத்தி, வருவாய்பெற வழிதேடிக்கொள்ள வேண்டும். நம் நாட்டிலே எல்லாவிதமான இயற்கைப் பொருள்களும் இருக்

கின்றன. அவற்றைப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து பயனுள்ள பொருள்களைச் செய்து உதவ வேண்டும். இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்; நாட்டுக் கைத்தொழிலும் வளரும். தேனீவளர்த்தல், காகிதம் செய்தல், பாய் பின்னுதல் போன்ற தொழில்களும் நமக்குப் பொருள் வருவாயைக் கொடுக்கும். அதனால் இளைஞர்கள், மேலே சொல்லப்பட்ட ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டுத் தாங்களும் நன்மை அடைந்து தங்கள் நாட்டிற்கும் நன்மை செய்வார்களாக.

பயிற்சி

1. நம் நாட்டில் குடிசைத்தொழில்கள் என்று சொல்லப்படுபவை யாவை?
2. நம் நாட்டில் நடைபெறும் சில குடிசைத் தொழில்களைக் குறிப்பிடுக.
3. மகாத்மா காந்தி கதரியக்கம் ஆரம்பிக்கக் காரணம் என்ன?
4. கயிறு தயாரிக்கும் முறையைப் பற்றி நீவிர் அறிவது யாது?

7. தமிழர் கடலாட்சி

[கனம் சக்கரவர்த்தி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்]

சுமார் நானூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னுல்தான் முதல் முதல் ஐரோப்பியர்கள் கடற்பிரயாணம் செய்து, இந்தியாவுக்கு வந்தார்கள். அதற்கு முன் பல்லாயிர வருஷங்களாக இந்திய வர்த்தகர்கள் கப்பல் ஏறிக் கடல் கடந்து சென்று வெளிநாடுகளில் தெற்கு மகாசமுத்திரத்தையும், அரபிக் கடலையும் கடந்து மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும், கிழக்கே சீனம் வரையிலும் சென்று இந்திய வியாபாரத் தொழில் நடத்தி வந்தார்கள். இந்து மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளிலும், பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளிலும் ஹிந்து சமயக் கோயில்கள் இன்றைக்கும் இருக்கின்றன. இந்தியப் பண்பாட்டின் வேறு சின்னங்களையும் அங்கேயெல்லாம் காணலாம். கடலுக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள அந்தப் பிரதேசங்களுடன் புராதன இந்தியாவின் ஜனங்கள் நீடித்த போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு இந்தச் சின்னங்கள் அத்தாட்சி ஆகும்.

ஏசுநாதர் சகாப்தம் (பிறந்து) ஆயிரத்தைந்நூறு வருஷங்கள் கழிந்த பிறகுதான் ஐரோப்பாவில் கொலம்பஸ் என்பவர் பெருங் கடல் கடந்து செல்லும் முயற்சியில் முனைந்தார். அது வரையிலும் மேனுட்டு மாலுமிகள் எல்லோரும் கரையோரமாகவே கப்பல்களைச் செலுத்தி வந்தார்கள். நடுக்கடலுக்குப்போவதற்கு அவர்கள் அப்போது இன்னும் துணியவில்லை.

ஆனுல் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னுல் அதாவது இரண்டாயிர வருஷத்திற்கு முந்தியே ஹிந்துக்கள் கப்பல்களில் ஏறி மகாசமுத்திரங்களைத் தாண்டிச் சென்ருர்கள். இந்த விபரங்களை எல்லாம் சில நாளைக்கு முன்னுல் நமது கடற்படைத் தலைவர் W. E. பாரி ஒரு சமயத்தில் நன்கு எடுத்துக் காட்டிப் பேசியிருக்கிருர்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னுல் அரபியர்கள் அரபிக்கடலைக் கடந்து எகிப்து தேசத்திற்கும் ரோமாபுரி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளுக்கும் சென்று வியாபாரம் செய்து வந்தார்கள். இதை நிரூபிப்பதற்கு நம்முடைய பழைய இலக்கியத்திலும் இந்தியச் சிற்பங்களிலும் அத்தாட்சிகளைக் காணலாம்.

கிரீஸ் கிரேக்க சரித்திரக்காரர்களும், ரோமாபுரி ஆசிரியர்களும் எழுதிய நூல்களில் இதைக் கண்டு கொள்ளலாம்.

மிகப் புராதன நாட்களிலேயே ஹிந்துக்கள் வங்காளக் குடாக் கடலையும், இந்துமகா சமுத்திரத்தையும் கப்பலில் கடந்து சென்று பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளில் குடியேறி வந்தார்கள். கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பிப்பதற்கு முன்னுலேயே ஹிந்துக்கள் மலேயா நாட்டுக்கும், சீன தேசத்திற்கும் இப்போது இந்தோனேஷியா என வழங்கும் சுமத்ரா ஜாவா தீவுகளுக்கும் கப்பல் ஏறிச் சென்றிருக்கிறார்கள். மகத தேசத்து அரசர் சந்திரகுப்தன் முதலிய மௌரிய மன்னர்கள் "கீழ்க்கடல்களின் அதிபதி" என்னும் பட்டத்தையும் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் என்னும் சீன யாத்திரிகர் தாம் இந்தியக் கப்பலில் ஒரு நீண்ட கடற்பிரயாணம் செய்ததைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார். ஒரிஸ்ஸாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து நிகோபார் தீவுகளுக்கும், அங்கிருந்து மலாக்கா வழியாகச் சீனுவுக்கும் இந்தியக் கப்பலில் அவர் பிரயாணம் செய்தார். இஃது ஆயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னுல் நடந்தது. அதே காலத்தில் தான் மலேயாவிலும், சுமத்ராவிலும், ஜாவாவிலும் இந்தியர்களின் ஆட்சி நிலைநாட்டப் பட்டிருந்தது. பிறகு ஆயிர வருஷ காலம் இந்து மகா சமுத்திரம் இந்துக்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அதற்குப் பிறகு அரபியர்களுடைய ஆதிக்கம் கடல்மேல் ஓங்கிற்று.

ஹிந்துக்கள் கடல் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் எந்த நாட்டுக் கப்பலும் தடையின்றிப் போக அனுமதி இருந்தது. கடற் கொள்ளைக்காரர்களை அடக்கிக் கடல் மார்க்கங்களில் பய மின்றிச் செய்திருந்தார்கள். நமது முன்னேர்கள் தர்ம மார்க்கத்தில் பற்றுள்ளவர்கள். ஆகையால், கடல் மார்க்கத்தில் தனி ஆதிக்கம் கோரவில்லை. எல்லா தேசக்கப்பல்களும் கடற்பாதைகளில் சுதந்திரமாகவும், நிர்ப்பயமாகவும் போகக் கூடியனவாயிருந்தன. ஆனுல் 1500-ஆம் வருஷத்தில் போர்ச்சுக்கல் நாட்டார் கடல் ஆதிக்கம் பெற்றபோது கடல் மார்க்கங்களுக்குத் தனி உரிமை

ஸ்தாபிக்க முயன்றார்கள்; பிறதேசக் கப்பல்களைத் தடைசெய்தனர். இவ்விதம் போர்ச்சுகீசியர்கள் கடல் மார்க்கங்களில் ஏகபோக உரிமை கொண்டாடியதைக் கோழிக்கோடு மலையாளத்துத் தம்புரான்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடினர்.

அப்போது நடந்த மூன்று கடல் யுத்தங்களில் தம்புரான்கள் தோல்வியடைந்தபடியால், கடல் ஆதிக்கம் போர்ச்சுகீசியரின் கைக்கு மாறியது. இந்தச் சம்பவம் பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. பிளாஸிச் சண்டையையும் கிளைவ் முதலியவர்கள் வெற்றிபெற்ற மற்றும் பல தரைச்சண்டைகளையும் விட, 1503-லும் 1509-லும் வருஷத்திலும் நடந்த யுத்தங்களே அடுத்த நானூறு வருஷங்களுக்கு இந்தியாவின் விதியை நிர்ணயித்தனவென்று கடற்படை நிபுணர்கள் கருதுகிறார்கள்.

சிவாஜி மன்னரின் காலத்திலும் கடற்படை யுத்தம் நடந்தது. இதையெல்லாம் கவனித்தால், இந்திய மக்களுக்கு அலைகடல் தாண்டுதல் என்பது புதிய விஷயமன்று என்பதை அறியலாம். இந்தக் காலத்தில் நமது செம்படவர்களின் வாழ்க்கையைக் கவனித்துப் பாருங்கள்! எவ்வளவு சகஜமாக அவர்கள் கடலில் பாய்கிறார்கள். நம் நாட்டு மக்கள் இந்த விஷயத்தில் மேனாட்டு மக்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர் அல்லர் என்பது நிச்சயம். சமுத்திர ராஜனிடத்தில் மற்றைய தேசத்தாருக்குள்ள உறவும் பாத்தியதையும் நமக்கும் நிச்சயமாக உண்டு. நவீன மாலுமிக் கருவிகளை உபயோகித்துக் கப்பல் ஓட்டுவதிலும் நமது இளைஞர்கள் திறமையுடன் விளங்குகிறார்கள் என்று இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. எனவே, நமது அன்பிற்குரிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதியார் இவர்களின் கனவுகள் நம்முடைய காலத்தில் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்களுடன் கொஞ்சம் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. சில நாள் சேலத்தில் என் குடிசையிலும் தங்கியிருந்தார்கள். இன்று நாம் தொடங்கும் காரியத்திற்கு அந்த ஆத்மாவின் ஆசியைப் பெறுவோமாக. இன்று இந்தக் கப்பலுக்கு அவருடைய திரு நாமம் தந்து ஓட்டப் போகிறோம். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை ஆனந்தக் கண்ணீர்

ததும்ப, தம் பெரிய கண்களை அகல விரித்து இந்த விழாவை யும் என்னையும் பார்த்துக் கொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய நிகழ்ச்சி அவருக்குக் கொஞ்சம் வேடிக்கையாகவும் இருக்கும். காரல் மில்ஸ், பி. ஐ. எஸ். என். கம்பெனி இவற்றின் ஒத்துழைப்புடனும் இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடனும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இந்தக் கப்பல் போக்குவரவை இன்று நான் ஆரம்பித்து வைக்கிறேன். ஹார்வி கம்பெனி, காரல் மில்ஸ் பஞ்சாலையைச் சேர்ந்தவர்களும், பி. ஐ. எஸ். என். கம்பெனியை நடத்தியவர்களும் அந்த நாளில் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை ஒரு பயங்கர எதிரியாகக் கருதினார்கள். திரு. ஆண்ட்ரூ ஹார்வியும், திரு. சாப்மனும் ராஜத்துவேஷக் குற்றம் சாட்டினார்கள். பின்னர் ஹே துரையைக் கொண்டு விசாரணை நடத்தி ஆயுள் பரியந்தம் இரட்டிப்பு தீவாந்தர தண் டனை விதிக்கச் செய்தார்கள். அந்தத் தீர்ப்பைக் கண்டு இந்தியா முழுவதும் வருத்தமும், வியப்பும், மனக் கசப்பும் பரவின. தேச மெங்கும் ஆத்திரம் பொங்கியது. ஹைகோர்ட்டார் ஆயுள் தண்டனையை ஏதோ நியாயம் கண்டு ஆறு வருஷச் சிறைத் தண் டனையாகக் குறைத்தார்கள். பெரும் அநீதிக்குச் சிறிது பரிகாரம் ஏற்பட்டது. இந்தத் தூத்துக்குடி மகா ஜனங்களை "வந்தே மாதரம்" என்று கூப்பாடு போடச் செய்தாரென்று ஸ்ரீ சிதம் பரம் பிள்ளை பேரில் குற்றம். ஸ்ரீ சுப்பிரமணிய சிவா பேசிய கூட்டங்களில் பிரசன்னமாயிருந்து "இந்தியா சுயராஜ்யம் பெற வேண்டும்" என்று சிவம் கூறியதைப் பூரணமாகச் சிதம்பரம் பிள்ளையும் ஒப்புக் கொண்டார் என்பது இன்னொரு பெருங்குற்றம். இந்தக் குற்றங்களுக்குத்தான் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை தண்டனை அடைந்தார். இது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. அவர் களைத் தண்டித்தபின் ஹேயை ஹைகோர்ட் நீதிபதியாக உயர்த்த வேண்டும் என்று ஒரு யோசனை ஏற்பட்டது. அதை அங்கீகரிக்க அப்போது இந்திய மந்திரியாக இருந்த லார்டு மார்லி மறுத்து விட்டார். மார்லி தம்முடைய "ஞாபகங்கள்" என்ற புத்தகத்தில் இது விஷயமாக எழுதியிருப்பது படித்தால் ரஸமாக இருக்கும். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும், ஸ்ரீ சுப்பிரமணிய சிவாவும் ஆறு வரு ஷம் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியே வந்தார்கள்.

நாற்பது வருஷங்களில் சக்கரம் ஒரு பெரிய சுற்றுச்சுற்றி விட்டது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை எதற்காகச் சிறை சென்று கஷ்டப்பட்டாரோ, அந்த நோக்கம் நிறைவேறி விட்டது. நாம் பூரண சுதந்திரம் பெற்று விட்டோம். ஹார்வி கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இன்று நான் விருந்தாளியாகத் தங்கி இருக்கிறேன். பி. ஐ. எஸ். என். கம்பெனியார் தங்களுடைய கப்பலை நிறுத்திக்கொண்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையின் பெயர் பூண்ட இந்தக் கப்பல் செல்வதற்கு இடமளித்திருக்கிறார்கள்.

தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் ஏற்பட்டு விட்டது. கப்பலுக்குச் சிதம்பரம் பிள்ளை அவர்களின் பெயரை வைத்து நாமகரணம் செய்து ஆரம்பித்து வைக்கிறேன். வீரனை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்களின் திரு நாமத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் பாரதக் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு கடலில் செல்லும்.

இந்தியக் கப்பல் தொழிலைப் புனர் நிர்மாணம் செய்யத் திறமையும் சிறந்த நிர்வாக அனுபவமு முள்ள ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார் ஏற்கெனவே எவ்வளவோ சேவைகள் செய்திருக்கிறார்கள். இன்னும் செய்து வருகிறார்கள்.

இந்தியா ஒரே நாடு. இந்தியாவின் பெருமையைப் பிரித்துப் பங்கிட முடியாது. எனினும், இந்தியக் கப்பற் போக்குவரவை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சி தூத்துக்குடியில்தான் முதன் முதலில் ஆரம்பித்தது. இந்த ஆரம்ப வைபவத்துக்குச் சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா இவர்களின் பலிதானமே ஆரம்ப வேள்வியாக 1908-ஆம் வருஷத்தில் அமைந்தது. இதை எண்ணித் தமிழர்கள் பெருமிதம் கொள்ளலாம்.

சென்றுபோன காலத்திய மாற்சரியமும், அறியாமையும், துவேஷமும் மறந்து விடப்படும். சுதந்திர இந்தியா மகோன்னதமாக விளங்கும். இந்தக் கப்பலின் எல்லா மாலுமிகளுக்கும் இந்தக் கூட்டை நடத்தும் நிர்வாகிகளுக்கும் என் ஆசி கூறுகிறேன். திறமையுடன் இடைவிடாது தொழில் முறையில் உழைப்பதே உயர்தர தேசபக்தி என்பதைத் தங்களுடைய செயலால் இவர்கள் நிரூபித்துக் காட்டுவார்களாக.

பயிற்சி

1. புராதன இந்தியர்கள் கடலுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுடன் போக்குவரவு வைத்துக் கொண்டிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் யாவை?
2. கொலம்பஸ் என்பவர் பெருங்கடல் கடந்து செல்லும் முயற்சியில் முனைந்தது எப்போது?
3. ஹிந்துக்கள் கப்பல்களில் ஏறி மகாசமுத்திரங்களைத் தாண்டிச் சென்றது எப்போது?
4. பாஹியான் என்னும் சீன யாத்திரிகர் எப்போது எங்கெங்கு இந்தியக் கப்பலில் பிரயாணம் செய்ததாகத் தெரிகிறது?
5. ஹிந்துக்கள் கடலாதிக்கம் பெற்றிருந்தபோதும் போர்ச்சுக்கல் நாட்டார் கடலாதிக்கம் பெற்றிருந்தபோதும் இருந்த நிலைகள் யாவை?
6. "நாற்பது வருஷங்களில் சக்கரம் ஒரு பெரிய சுற்றுச் சுற்றி விட்டது" இதனைச் சந்தர்ப்பத்துடன் விளக்குக.
7. "இந்திய மக்களுக்கு அலைகடல் தாண்டுதல் என்பது புதிய விஷயமன்று" என்பதைப் பற்றி இருபது வரிகளுக்கு மிகாமல் கட்டுரை வரைக.

8. பொருநர் ஆற்றுப்படை

[வித்துவான் R. விசுவநாதன் M.A., B.O.L.]

[நமக்குக் கிடைத்துள்ள பண்டைத் தமிழ் நூல்களுள், பத்து பாடல்களைக்கொண்ட பத்துப் பாட்டு என்னும் நூல் சிறந்ததும் மிகப் பழமையானதும் ஆகும். பொருநர் ஆற்றுப்படை யென்பது அவற்றுள் ஒன்று. பண்டைத் தமிழ்க் குடிகளுள் பொருநர் என ஒரு சாரார் இருந்தனர். அவர்கள் அரசர்களிடமும், வேளாளர்களிடமும் சென்று அவர்களுடைய போர்க்களங்களையும், ஏர்க்களங்களையும் பாடி அவர்கள் கொடுக்கும் சம்மானங்களைப் பெற்றுப் பிழைத்து வந்தனர். இவர்களுடைய பெண்பாலர்களைப் பாடினி என்று அழைப்பது வழக்கம். இப்பாடினிகள் பாட இவர்கள் தம்மிடமுள்ள யாழை மீட்டுவர். இவர்கள் அரசர்களாலும் வேளாளர்களாலும் பெரிதும் போற்றப்பட்டு வந்தனர்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சோழ நாட்டைக் கரிகாற்பெருவளத்தான் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் தன் புஜவலிமையால் ஈழம் முதல் இமாலயம் வரை வென்றதாகக் கூறுவர். அவனுடைய பெருமைகளைப் பல புலவர்கள் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். அப்படிப்பட்ட பாடல்களுள் முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர் பாடிய பொருநர் ஆற்றுப்படையும் ஒன்று.

வள்ளல்களைப் போற்றுவதற்காகப் புலவர்கள் படைத்துக் கொள்ளும் வகைகளுள் ஆற்றுப்படை என்பது ஒன்று. ஓர் ஏழைப் பரிசிலன் தன்னைப் புரக்கும் வள்ளியோன் எங்குக் கிடைப்பான் என்று வருந்தி அலைந்துகொண்டிருக்க, அவனுடைய நற்காலத்தால் பரிசுபெற்ற மற்றொருவன் அவனை வழியிற் கண்டு, தனக்குப் பரிசுகொடுத்த வள்ளலின் பெருமைகளைக் கூறி, அவ்வள்ளல் இருக்குமிடத்துக்கு அவ்வேழையை அனுப்புவதாகப் பாடுவதே ஆற்றுப் படை என்னும் பாடல் வகையாகும். இங்குப் பாடமாக அமைந்திருக்கும் ஆற்றுப் படையின் நாடகப் பண்பையும் இதனால் தெரியவரும் வரலாறுகளையும் இதன் இலக்கியச் செறிவையும் கூர்ந்து காண்க.]

" அருங் கோடை; நினைப்பவர் கருத்தையும் சுடும் வண்ணம் கதிரவன் காய்ந்தான்; அரக்கை உருக்கி ஊற்றினது போலத் தரை சிவந்து கிடந்தது. முட்களைப் பரப்பி வைத்தாற் போலப் பரற்கற்கள் நீட்டிக்கொண்டு கிடந்தன; மரங்களோ தம் சிறிய இலைகளையும் இழந்து சிலந்தி வலை பின்னியதுபோல் சிறு தூறுகள் மட்டும் படர்ந்து நின்றன.

இத்தகைய கொடிய பாலைவழியிலே மெய் இளைத்து, மனஞ் சோர்ந்து இருவர் மெல்ல மெல்ல நடந்து வந்தனர். ஒருவர் ஆடவர்; அவர் கையில் அழகிய தொரு யாழ் இருந்தது; நூல்களிற் கூறிய இலக்கணம் அவ்வளவும் செறியப்பெற்றது அவ்வியாழ்; பவழ நிறத்தையொத்த தோலொன்று அதன் குடப் பகுதியை மூடிக்கொண்டு இருந்தது. அதன் கரிய தண்டை ஆடவன் தன் தோள்மேல் சார்த்தி நிமிர்த்திப் பிடித்திருந்ததைப் பார்க்கும்போது ஒரு கருநாகந்தான் தலையெடுத்து ஓங்கி நின்றது போலத் தோன்றிற்று. அதன் நரம்புகள் நன்றாய்க் குத்தின தினையரிசிகளைக் கோத்தமைத்தாற் போல விளங்கின. இவ்வாறு பல அழகுகளையும் பெற்று விளங்கிய அவ்வியாழ் ஓர் அழகிய மணப் பெண்ணின் தோற்றத்தை அளித்தது.

அவனுடன் நடந்துவந்த மாது மிக அழகிய தோற்றத்தை உடையவள். அவள் கையில் தடாரி என்ற அழகியதொரு சிறு பறையை வைத்திருந்தாள். அவர்கள் இயற்கையிலே மிக்க உடலழகைப் பெற்றிருந்தும், தம் வறுமையாலும் வழி நடையின் வருத்தத்தாலும் மிகவும் களைத்துப் பொலிவிழந்திருந்தனர். அவர்களின் ஆடைகள் மாசு படிந்தும் கிழிந்தும் காணப் பெற்றன. நல்ல உச்சிவேளை யானதால் பாடினியின் அடிகள் கொப்புளங்களால் நடக்க முடியாமல் தவித்தன. அதைக்கண்டு பொருநன் மனமுருகி, ஆங்கிருந்த மர நிழலில் தங்க எண்ணினன். அம்மரம் பெரியதாயிருந்தும் அதன் நிழல் அரியதாக இருந்தது. இருந்தாலும் என்ன செய்வான்!

அம்மரநிழலில் ஓரிடத்தில் இருவரும் இருந்து இளைப்பாறினர். பகலவன் மேற்கே சாய்ந்தபின் வெயிலின் கொடுமையும் ஓரளவு குறைந்தது. பொருநன் தன் யாழை மீட்டிக் கடவுளைத் துதிக்க எண்ணினன். அதன் நரம்புகளை அவன் தன் விரல்களால்

வாரி, உருவி, உந்தி, சுருதி கூட்டினன். அவன் குறிப்பையுயறிந்த பாடினி தன் கையில் இருந்த சிறு பறையைக் கொட்டிக்கொண்டு பாடத் தொடங்கினள். அவள் காட்டிய தாளத்திற்கேற்ப அவன் யாழ் வாசித்தான். இவ்வாறு அவ்விருவரும் அந்நடுப்பாலையிலே இருந்து எழுப்பிய கானமும், அவர்களுடைய தூய்மையான தோற்றமும்; அவ்விடத்திற்கே ஒரு தெய்வத் தோற்றத்தை அளித்தன.

அந்நிலையில் அவ்விடத்துக்கு மற்றொரு பொருநன் வந்தான். ஆனால் அவன் சிறந்த செல்வவான் போல் காணப் பெற்றான். அவன் மரநிழலில் தங்கியிருந்த வறுமையாளனை நோக்கி, "ஐய, உயர்ந்த யாழினால் உலகை மகிழ்விக்கும் பெரியோனே! உன்முகத்தில் அறிவு ததும்புகிறது. உன் நல்வினைப்பயனே, கண்ட வழிகளிற் செல்லாமல், இவ்வழியிலே உன்னை வரச் செய்தது. உன்கொடிய பசி உன்னைவிட்டு நீங்குவதை நீ விரும்பு வாயானால், நான் சொல்வதைக் கேள்.

உன்னிலும் கொடிய வறுமையிலேதான் நானும் இருந்தேன்; பழு மரத்தை நாடி அலையும் பறவையைப்போல் நானும் பல இடங் களிலும் சென்றலைந்தேன். என் நல்வினை என்னை உறையூருக்கு அழைத்துச் சென்றது. அங்கே அகலமுள்ள மதில்கள் சூழ்ந்த ஓர் அரண்மனையை அடைந்தேன். அதன் கோபுர வாயிலுள் நான் நுழைந்தபோது என்னைத் தடுப்பவர் எவரும் இலர்; அவ் வாயிலினுள் நுழைந்த அளவிலே என் இளைப்பு தீர்ந்துவிட்டது போல் இருந்தது. அப்பொழுது வெள்ளி முளைத்தெழுந்த நேரம்; பொழுது புலர்ந்து விடவில்லை. அந்நேரத்தில் அங்கு நின்று கொண்டே தாளத்துடன் கூடிய ஒரு பாடலைப் பாடினேன்.

அதனைக் கேட்டதும் ஓர் ஆண்மகன் அவ்வரண்மனையிலிருந்து வெளியே வந்தான்; பல நாட்களாக என்னிடம் உறவு கொண்ட வன் போல் அவன் என்னை நோக்கிப் பல உபசார மொழிகளைக் கூறி, என்னை உள்ளே அழைத்துச் சென்றான்; அவன் என்னைப் பார்த்த அன்புப் பார்வை என் உள்ளத்தை மெழுகுபோல் உருகச் செய்தது. என் உடலில் இருந்த அழுக்கும் ஈரும் பேனும் நிறைந்து கிடந்த கந்தல் துணியை நீக்கி, நுட்பமான பூவேலைப் பாடுகள் அமைந்த மெல்லிய ஆடையை எனக்குக் கொடுத்து அவன் கட்டிக்கொள்ளச் சொன்னான். அது பாம்பினது தோலைப்

போல் மென்மையாக இருந்தது; அவனுடைய பணியாளர்கள் வந்து தங்கக் கிண்ணத்திலே அரசன் பருகும் பானத்தை நிரம்ப ஊற்றி என்னைக் குடிக்கச் செய்தார்கள். அன்று முழுவதும் எனக்கு நடந்த விருந்தினை நான் என்னென்று சொல்வேன்! அன்று மாலைக்குள் நான் புதிய மனிதனாகி விட்டேன். அன்றிரவு அவ்வரண்மனையிலேயே தங்கி நன்றாய்த் தூங்கினேன்.

மன்னன் என்னைத் தன்னுடனேயே சில நாட்கள் தங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். நானும் அதற்கு இசைந்தேன். அந்நாட்களில் அவன் எனக்கு ஊட்டிய உணவுகளின் பெருமையையும், அவன் என்னிடம் கூறிய நன்மொழிகளின் இனிமையையும், எனக்கு அவன் செய்த பிற நன்மைகளின் அருமையையும் என்னால் அளவிட்டுக் கூறமுடியாது. முடிவாக நான் அவனை விட்டுப் புறப்பட வெண்ணியபோது, அவன் மிகுந்த வருத்தத்துடன் எனக்குப் போக விடையளித்தான். அப்பொழுது எனக்குப் பல யானைகளையும், வாகன வகைகளையும், ஆடையாபரணங்களையும் வேண்டிய மட்டும் அவன் ஈந்தான்; என் வறுமை தீர்ந்தது.

அம்மன்னன் எத்தகையவன் என்பாயானால் சொல்வேன்: அவனுடைய தோற்றம் முருகனைக் கண்டாற் போல் இருக்கும்; அவன்பெயர் கரிகாற்சோழன் என்பது; இளங்கதிரவன் வானத்திற் படர்ந்து தன் ஒளியிற் பெருகுவது போல அவன் இளமையிலேயே அரசுரிமை பெற்று நாளுக்கு நாள் வீரத்திலும் புகழிலும் மேம்பாடு அடைந்து வந்தான். சிங்கக்குட்டி தன் தாய்ப்பாலை அருந்திவரும் காலந்தொட்டே யானைகளை அடித்து வருவது போல அவன் தன் இளமை முதற்கொண்டே பகைவர்களைக் கொன்று குவித்து வந்தான். ஒருமுறை சேரனும், பாண்டியனும் ஒன்றுகூடி வெண்ணி என்ற ஊரிலே அவனை எதிர்த்து நிற்க, அவன் தான் ஒருவனே நின்று அவ்விருவரையும் உயிர் இழக்கச் செய்தான்.

அவனுடைய நாட்டின் பெருமையை நான் எவ்வாறு கூறுவேன்! அவன் நாட்டின் மருத நிலப் பகுதியிலே வயல்கள் தோறும் காணும் திடர்களில் நெற் கூடுகள் மலைகள்போல் காட்சியளிக்கும்; காக்கைகள் ஆமைப்பார்ப்புகளை நாடி நொச்சிச் செடி

களின் அடிகளிலே தத்தும்; மயில்கள் பலாப்பழங்களைக் கொத்தித் தின்றுவிட்டுக் காஞ்சி மரங்களில் ஏறித் தம் தோகையை விரித்தாடும். சுறாமீன்களைத் தின்ற நாரைகள் பனைகளின் மடலிலே சென்று தங்கும்; உழத்தியர் மணற்கரைகளிலே வண்டலிழைத்து விளையாடுவர்; செம்படவர் மலையிடங்களுக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு புகழ்வர்; தேனையும் நெய்யையும் விற்றுக் குறத்தியர் மீனையும் கள்ளையும் வாங்கிப்போவர்; அவலை விற்று உழத்தியர் மான் தசையை மாறிப் போவர்; குறவர் நெய்தற் பூவாற் செய்த கண்ணியைச் சூடுவர்; கானவர் மருதம் பாடுவர்; கானக்கோழி நெற்கதிரைத் தின்னும்; மனைக்கோழி தினையைக் கவரும்; மலைமந்தி கழியிலே மூழ்கும்; கழிநாரை மலையிலே தங்கும்.

இத்தகைய நாட்டிலே காவிரி என்னும் ஓர் ஆறு ஓடுகிறது. மரங்கள் தீய்ந்தும், மலையருவிகள் உலர்ந்தும், மேகங்கள் வறண்டும் உள்ள கொடிய வேனிற் காலத்திலும் அக்காவிரியாற்றில் பெரு வெள்ளம் ஓடுவது வியப்பைத் தரும்; அவ்வெள்ளத்தில் நறைக் கொடியும், நரந்தப் புல்லும், அகிலும், சந்தனமும் மிதந்துவந்து துறைதோறும் ஒதுங்கிக் கிடப்பது கண்களைக்கவரும் காட்சியே யாகும். இங்ஙனம் ஓடிவரும் நீரை உழவர்கள் வாய்க்கால்கள் வழியே கொண்டு சென்று தங்கள் குளங்களையும் குட்டைகளையும் நிரப்புவர்; அந்நீர் நிலயங்களிலே நீராடுமகளிர் குடைந்து விளையாடுவர். வயல்களில் வேலி யொன்றிற்கு ஆயிரம் கலம் நெல் விளையுமாதலால் அந்நாட்டில் உணவுக்குப் பஞ்சமே இல்லை.

அத்தகைய கரிகாலனை நீ உடனே சென்று காண்பாயாக. அவன் உன்னைக் கண்டவுடன் உன் வறுமையெல்லாம் உன்னை விட்டு நீங்கும்; உன் சிரைத் துணியை நீக்கி உனக்கு உயர்ந்த பட்டாடைகளை அவன் அணிவிப்பான்; நீ தின்று தெவிட்டும்படியான உயர்ந்த உணவை உனக்குக் கொடுப்பான்; உன் பாடினிக்குச் சூடப் பொற்றாமரைப் பூவையும், அணியப் பொன்னரி மாலையையும், வெள்ளிய முத்து மாலையையும் கொடுப்பான். உங்களுக்கு வேண்டிய பரிசில்களை அவன் அளித்து நான்குகுதிரைகள் கட்டிய அழகிய தேரிலே ஏற்றி, தான் ஏழடி நடந்து வழிவிட்டுத் திரும்புவான். அவனைக் கண்ட பிறகு நீயே வள்ளலாகிப் பிறருக்கு வேண்டுவன எல்லாவற்றையும் ஈயக் கூடியவனாவாய்; உடனே

அங்குச் செல்வாயாக " எனக்கூறிக் கரிகால் பெருவளத்தானிடம் அப்பொருநனை ஆற்றுப்படுத்தினன்.

பயிற்சி

1. பொருநர் ஆற்றுப்படை எந்நூல் வகையைச் சார்ந்தது? இதனைப் பாடியவர் யார்?
2. ஆற்றுப்படை என்றால் என்ன? விளக்குக.
3. பாலையின் கொடுமை யாங்ஙனமிருந்தது?
4. யாழின் தோற்றம் எவ்வாறிருந்தது?
5. பொருநன் ஆற்றுப்படுத்திய வகையினைப் பதினெட்டு வரிகளுள் சுருக்கி வரைக.
6. கரிகாற்சோழன் தன்னை எவ்விதம் உபசரித்ததாகப் பொருநன் கூறினன்?
7. கரிகாற் சோழனின் வீரம் எத்தகையது?
8. சோழநாட்டின் வளத்தையும், காவிரியின் சிறப்பையுந் தொகுத்து வரைக.

9. கடமையும் இன்பமும்

[திரு. கா. அப்பாதுரைப் பிள்ளை, M.A., L.T.]

பாத். அக்டோபர் 4, 1746.

உனக்குக் கடிதம் எழுதுவதில் நான் எவ்வளவோ உழைப்பும் நேரமும் செலவிடுகிறேன். ஆயினும் இவையெல்லாம் பயனுடையனவாகுமா என்று பல சமயம் நான் கவலைப் படுவதுண்டு. காரணம் முதியோர் அறிவுரை இளைஞர்கட்குப் பொதுவாகப் பிடித்தமாயிருக்க மாட்டாது என்பதுதான். ஆயினும் உன் இயற்கை யறிவில் எனக்கு நம்பிக்கை உண்டு. அறிவுரை கூறுபவர், அறிவுரை கேட்பவர் நலனையல்லாது வேறு நலனுடையவரா யிருந்தால், அறிவுரையின் உள்ளார்ந்த நோக்கமும் அறிவுரையாளர் நலனை ஒட்டியதாக இருக்கக் கூடும் என்று ஐயப்படக் காரணமுண்டாகலாம். என்னைப் பற்றியவரையில் உன் நலனேயல்லாது வேறு நலன் எனக்கில்லை என்பதை நீ அறிவாய். ஆகவே மற்ற முதியோர் அறிவுரைகளை மட்டுமன்றி இளைஞர் அறிவுரைகளைவிடக் கூட என் அறிவுரை தூய்மையுடையதா யிருக்கத் தக்கது.

அறிவுலகம் தந்தை என்ற முறையில் உன் கடமைகள் இவையெனக் கூறும் உரிமையை மட்டுமின்றி, இதனைச் செய் என்று கட்டளையிடும் உரிமையையும் எனக்குத் தந்துள்ளது. பொருளுலகமோ பொருள் வகையிலும் உன்னை என்னைச் சார்ந்து வாழ வைத்திருக்கிறது. இங்ஙனம் அறிவுரையில்லாமலேயே உன்னை என் விருப்பப்படி நான் நடத்தமுடியும்; நீ மீறினால் உன் வருவாயை நிறுத்தவும் என்னால் கூடும். இவ்வளவு ஆற்றலிருந்தும் உனக்கு அறிவுரை தருவது, உன் நலனை உனக் கறிவிப்பது, சில சமயம் நயமாகவேண்டுவது எதனால்? உன் நலன், என் நலன்; உன் இன்பம், என் இன்பம், என்பதனால் மட்டுந்தானே!

இதுகாறும் பெரிய செய்திகளிலும் மிக நுட்பமான செய்திகளிலும் உன் கடமைகள் இவை இவை என அறிவித்திருக்கிறேன். ஆனால் கடமை எவ்வளவு இன்றியமையாததாயினும், இன்பமன்று. வருங்காலப் பயனை எண்ணிக்கூட, நிகழ்கால இன்பத்தைக் கைவிடுவது அரிது. பல இளைஞர் வேட்கையால்

கடமைகளை மறப்பதற்கு இதுவே காரணம். ஆனால் கடமை, இன்பம் ஆகியவற்றின் உண்மையான இயல்புகளை அறிபவர்களுக்கு அவை இரண்டும் மெய்யாக ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவையல்ல என்பது விளங்கும். ஏனெனில், கடமையே உண்மையான இன்பம்; எதிர்கால நிலையான இன்பங்களுக்கு அடிகோலுவது கடமையே.

கடமைகள் இன்பத்துக்கு உதவுபவை மட்டுமல்ல; உண்மையான இன்பத்துக்கு அவை இன்றியமையாதவை ஆகும். ஏனெனில் இன்பங்கள் அனைத்திற்கும் அடிப்படையான உயிர்நிலை இன்பம் ஒருவன் பிறரால் தன்னை ஒத்த வயதுடையவர்களுள் சிறப்புடையவன் என்று மதிக்கப்படுவதே யாகும். உன்னை ஒத்த பிறர் உன்னிலும் மிக்கவர் என்று கருதப்படுவதே இதற்கு மாறான உண்மைத் துன்பம் அல்லவா? உன் கல்வியிலும் மேம்பாட்டிலும் நான் எடுத்துக்கொள்ளும் அரும் பெரு முயற்சியை அறிபவர்கள், இவ்வளவிருந்தும் நீ முன்னேற்ற மடையவில்லை என்று கூறும்போது உன்மனத் துன்பம் இன்னும் மிகுதியாகவே இருக்கவேண்டும்.

நீ பிறரைவிட உயர்வடைய நான் உன்னைத் தூண்டுவது உன் தற்பெருமையைப் பெருக்குவதற்காக மட்டுமன்று. அத் தற்பெருமைகூட விரும்பத்தக்க ஒன்றே; ஆனால் அதனினும் விரும்பத்தக்கது அதற்கான உண்மைத் தகுதியே ஆகும். அது வெறும் தற்பெருமையன்று, பிறர்க்கு நலம் பயப்பது. உண்மையில் ஒருவன் பேரறிஞனாயிராமல் பிறரால் அறிஞன் என்று புகழடைதல் கூடும். பிறருக்கு அறிவைக் காட்டுமளவு பல துறைகளில் சிறிது சிறிது அறிந்திருப்பதின்மூலம் இப்புகழ் கிட்டும். இதனால் தற்பெருமை மட்டுமே கிடைக்கும். உலகம் நன்மை பெறாது. துண்டு துண்டாகக் கற்ற மேலீடான அறிவு ஒரே கோவையாக மாட்டாது, உருப்படியாக உதவவும் செய்யாது. ஆதலால் தான் 'கற்க கசடறக் கற்பவை' 'ஆழ்ந்து கற்க' என்னும் அறிவுரைகள் தரப்படுகின்றன.

"அரைகுறை அறிவினால் ஆரிடர் விளையும்; அறிவுச் சுனைநீர் அள்ளிப்பருகுக; அன்றேல் விடுக்க" என்ற திரு. போப் அறிவுரை பொன்போல் போற்றத்தக்கது.

சிதறிய மேற்புல்லறிவுடையவன் போலிப் புலவனே யாவான். என் இளமையில் ஏதேனும் ஒரு துறையிலேனும் ஆழ்ந்த அறிவுச் சுரங்கத்தில் உழைத்திராவிட்டால் நான் எவ்வளவு அவப்பேறுடையவனு யிருப்பேன் என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. இப்பருவத்தில் அவ்வுழைப்பின் பயன் மட்டும் இல்லாதிருந்தால் நான் என்ன செய்யக்கூடும்? பல அறிவிலிகள் இளமையை வீணுக்கி முதுமையில் மாலையும் இரவுமிருந்து கற்று உடல் நலத்தையும் மூளைக். குளிர்ச்சியையும் கெடுப்பதுபோல நானும் கெடுத்து, வட்டிநாடி முதலையும் இழக்கத்தானே வேண்டி வரும்! அல்லது அறிவில்லாததன் பயனுய்க் கீழோர் உறவை நாடி அக் கீழோரும் புறக்கணிக்கத்தானே வாழவேண்டும்? அங்ஙனம் வாழ்வதைவிட மாள்வதே மேல் என்று நான் எண்ணுவேன்.

இம் முதுமையில் எனக்குக் களைகணுய் இருப்பன நூல்களே. ஸிஸரோ கூறுவதுபோல் " நூல்கள் முதுமையின் ஆதரவு, இளமையின் அணிகலன்; அறிஞர் தொடர்பிற்கு இடையீடு, இன்ப வாழ்விற்குத் திறவு கோல்".

நூலறிவைப் புகழ்வதால் நான் உரையாடலையும் இன்பங்களையும் பழிக்கவில்லை. ஆனல் அவ்வின்பங்களும் அறிவுடையவர்கட்கே முழுமையும் பயன்படும். இன்பம் என்பது ஒரு குணம்; அஃது அறிவு என்னும் பொருளைச் சார்ந்தே நிற்கும். உடலில்லாத அழகு ஏது? இருப்பினும் அஃது உயிரிலாப் பொருள்களின் அழகுபோல் இன்பங் கொடுக்குமேயன்றி இன்பம் துய்க்காதன்றே?

ஆகவே இளமையில் உன் இன்பத்தை அறிவோடொன்றுபடுத்திப் பேரின்ப வாழ்வுக்குச் சேமக்கலமாக அறிவைத் திரட்டி வைப்பாயாக. மழைக் காலத்தில் விதைத்து வேனிற்காலத்தில் வளர்த்துக் குளிர்காலத்தில் அறுத்தெடுத்துப் பயன்பெறுவது போல இளமையில் அறிவு விதைத்து முதுமையில் துய்ப்பாயாக.

அறிவுபற்றி என்னுரைகளை இத்துடன் நிறுத்திக்கொள்வேன். அவற்றைச் செயற்படுத்தும் வேலை திரு. *ஹார்ட்டியினுடையது.

* சிறுவன் பிலிப் செஸ்டர் பீல்டின் பயண கால ஆசிரியர்.

நூலாலறியும் அறிவு ஒருசிறு பகுதி போக மீந்த அனைத்தும் உலக வாழ்வில் பெறவேண்டியதே. அதில் மிகச்சிறந்த வாய்ப்பு உரையாடலிலேயே கிடைக்கும். ஆனால் இவ்வறிவும் அறிவுடையார் உரையாடலில் மட்டுமே கிடைக்குமாதலால் அறிவின் பெரும் பகுதிக்கு நூல்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ காரணம் ஆகின்றன என்று காணலாம்.

இக்கடிதத்தை நீ ஒரு தடவைக்கு இரு தடவை வாசித்தல் நல்லது—ஒரு தடவைகூட நீ முற்றிலும் வாசிப்பாயோ என்ற ஐயத்துடன் இதை இவ்விடத்தில் முடித்துக்கொள்ளுகிறேன்.

உன் அன்புமிக்க தந்தை.

பயிற்சி

1. கட்டளையிடும் உரிமை பெற்றிருக்கும் தந்தை, மகனுக்கு அறிவுரை கூறுவதும், சில சமயம் மகனை கயமாக வேண்டுவதும் எதனால் என்று விளக்குக.
2. உண்மைத் துன்பம் யாது?
3. தற்பெருமையைப் பற்றி ஆசிரியர் கூறுவது யாது?
4. ஒரு துறையிலேனும் ஆழ்ந்த அறிவு வேண்டும் என்பதனை ஆசிரியர் வற்புறுத்தும் விதம் யாது?
5. இளமையிற் கற்கவேண்டுமென்பது யாங்ஙனம் வலியுறுத்தப் பட்டுள்ளது?

10. கருணை—ஒரு நாடகம்

[சு. குருசுவாமி அவர்கள், B.A., L.T.,]

சேலம் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி; ஆத்தூர்.

நாடகத்தில் வரும் ஆட்கள்:

(1) ஒரு நிலக்கிழவர்.

(2) வசந்த குமாரி: அவருடைய மனைவி.

(3) மீனாட்சி: வசந்த குமாரியின் தாயார்.

(4) வேலன்: வீட்டு வேலைக்காரன்.

(5) பிச்சைக்காரி.

[ஒரு மாடி வீடு. மாலை ஐந்து மணி. நிலக்கிழவருடைய மனைவி வசந்த குமாரியும் அவள் தாயார் மீனாட்சியம்மாளும் சிற்றுண்டி அருந்தியபின் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

வசந்த குமாரி: மக்கள் படும் துன்பத்தைக் கேட்டால் பொறுக்க முடியவில்லை அம்மா! ஒவ்வொரு நாளும் அவர் வந்து சொல்வதைக் கேட்டால் நெஞ்சைப் பிளக்கிறது.

மீனாட்சி: ஆமாம் வசந்தா, நேற்று உன் வீட்டுக்காரர் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தாரே, என்ன சொன்னாரென்று கேட்க நினைத்தேன்; அப்புறம் மறந்துவிட்டேன். என்னம்மா சொன்னார்?

வச: கல்கத்தா என்று கேள்விப் பட்டிருக்கிறாயல்லவா? அந்த ஊரிலே பெருவாரியாக மக்கள் பட்டினிகிடந்து சாகிறார்களாம் அம்மா.

மீ: என்னடி அநியாயம். சண்டை நடந்தால் இந்தக் காலத்தில் மக்கள் குண்டு விழுந்துதான் சாகுமென்று கேள்விப் பட்டிருக்கிறோம். பட்டினி கிடந்து ஏண்டி சாகணும்.

வச: அதுதான் கலிகாலமென்று சொல்லுகிறது! அதுவும் ஒன்று இரண்டா அம்மா? நூற்றுக் கணக்கில் சாகிறார்களாம்!

மீ: பாவம், அந்த ஊர் எங்கே இருக்கிறது?

வச: இங்கிருந்து எண்ணூறு, தொள்ளாயிரம் மைலுக்கு அப்பால் இருக்கிறதாம்.

மீ: அந்த ஊருக்குக் கிட்ட முட்ட வயல்களே கிடையாது போலிருக்கிறது. ஏன் வசந்தா, அப்படித்தானே?

வச: அதுதானம்மா வேடிக்கை. அந்த ஊர் வங்காளத்திலே இருக்கிறது. அந்த வங்காளந்தான் நம் நாட்டிலேயே மிக வும் செழிப்பான பாகமாம். அதை நம் நாட்டுக்கு நெல் களஞ்சியம் என்று சொல்வார்களாம்.

மீ: அதற்கே இந்தப் பாடென்றால், நாம் என்ன பாடு படப் போகிறோமோ?

வச: அதுதானம்மா பயமாயிருக்கிறது. ஊரெல்லாம் மக்கள் பஞ்சம் பஞ்சம் என்று பரிதவிக்கின்றனர்.

(பிச்சைக்காரி ஒருத்தி வாயிலில் வந்து நின்று கத்துகிறாள்)

பிச்சைக்காரி: அம்மா, பெரியவீட்டுக்காரர்களே! கொஞ்சம் பிச்சை போடுங்கம்மா!

வச: மக்கள் படும்பாடு சொல்லிமுடியாதம்மா, ஒரு பிடி சோறு கிடைக்காமல் உயிரை விடுகிறார்களாம்!

மீ: உயிரை விடாமல் பின்னே என்னடி செய்கிறது! சோற்றால் அடித்த சுவர்தானே இது!

வச: ஒரு நாளைக்குச் சமையலாகக் கொஞ்சம் நேரமாய்விட்டால், நாம் என்னபாடு படுகிறோம்? அந்த மக்களுடைய துன்பம் ....அம்ம! நினைக்கவே பயமாயிருக்கிறது. அந்தமாதிரித் துன்பம் நமக்கு வரப்படாது, கடவுளே!

மீ: நம் ஊருக்கே வரப்படாது! வேறே யாருக்குமே வரவேண் டாம் என்று கும்பிடம்மா வசந்தா.

பிச்: (வெளியிலிருந்து) அம்மா! கொஞ்சம் பிச்சை போடம்மா! பிள்ளைக்காரிக்கு இரங்குங்கள். அம்மா! தாயே!

மீ: இந்த உடம்பை "அன்னமய கோசம்" என்று சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள்! ஒருவேளை அன்னமிலா விட் டால் இந்த உடம்பு என்னபாடு படுகிறது!

வச: உனக்குச் செய்தி முழுவதும் சொல்லவில்லையே அம்மா! சொல்லுகிறதற்கே நடுக்கமா யிருக்கிறது.

பிச்: (வெளியிலிருந்து) வயிற்றுப் பசி பிராணன் போகுதம்மா கொஞ்சம் பழையதிருந்தால் போடுங்களேன், தருமசாமி!

மீ: நாங்கள் பேசிக் கொண்டிருக்கிற காரியம் என்ன? நீ வேறே! ஏண்டி "தொண தொண" என்று கத்திக்கொண்டே இருக்கிறாய்? பேசிக்கொண்டிருக்கிறது தெரியவில்லையா? பிச்சை கேட்கிறதற்கு இந்த ஊரிலேயே இந்த ஒரு வீடுதான் உனக்குக் கிடைத்ததோ?

வச: கல்கத்தா கண்ணராவியை என்ன என்று சொல்ல முடியும் அம்மா! அவர் சொல்லக் கேட்கவேண்டும். கல்லும் உருகும், இரும்பும் இளகும். தாய்மாரெல்லாம் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் தெருவிலே விரட்டி விடுகிறார்களாம்!

மீ: அட பாவமே, பழிகாரிகளா! ச்! ச்! ச்! இது என்ன கொடுமை!

பிச்: (வெளியிலிருந்து) இந்தப் பச்சைக் குழந்தைக்காவது ஒரு பிடி சோறு போடுங்கம்மா! தர்ம துரைகளே, ஏழைக்கிரங்குங்கள், அம்மா!

வச: நீயும் ஏண்டி இப்படித் தொல்லை பண்ணுகிறாய்? அடுத்த வீடு அண்டைவீடெல்லாம் கெட்டுப்போய் விட்டதா என்ன?

மீ: இப்படி எந்தப் பெண்பிள்ளைக்காவது மனது வருமாடி? நமக்குச் சோறில்லை என்றால், நம்ம கமலத்தையும், கண்ணனையும் தெருவிலா துரத்தி விடுவோம்?

வச: இன்னும் கேளம்மா. வயதுவந்த பெற்றோர்களை எல்லாம் பிள்ளைகள் கைவிட்டு விட்டார்களாம். மனைவிமாரைக் கணவன்மார் துரத்தி விடுகிறார்களாம். உடன் பிறந்தவர்களையெல்லாம் உதறித் தள்ளி விடுகிறார்களாம். குடும்பமெல்லாம் சிதறிக் கிடக்கிறதாம்!

மீ: என்னடி தாதவருஷப் பஞ்சக் கதை சொல்வதுபோல் சொல்லுகிறாய்? இப்படி எங்காவது நடக்குமா?

வச: நம் கண்முன்னாலே நம் காலத்திலேயே நடக்கிறதம்மா நாள்தோறும் பத்திரிகையிலே படிக்கிறோமே!

பிச்: (வெளியிலிருந்து) ஏழைக்கிரங்குவார் ஒருத்தரு மில்லையா! சாமி "விடுவிடா அலைந்து விட்டேனே! ஒருத்தராவது ஒரு பிடிசோறு போடமாட்டேன் என்கிறார்களே சாமி! அம்மா, தாயே! கொஞ்சம் பழைய சோற்றுத் தண்ணீராவது ஊற்றுங்களேன்!

வச: பேசாமல் போகிறாயா, நாயை ஏவிவிடட்டுமா?........அம்மா இன்னொரு கதையைச் சொல்ல மறந்து விட்டேனே! ஐயோ! அந்தப் பரிதாபத்தை ஏன் கேட்கிறாய்!

மீ: சொல்லு, சொல்லு, அதுவும் சொல்லு, அப்புறமும் சொல்லு ஈசனே! எம்பெருமானே!

வச: ஒரு பையன்........பாவம்........எத்தனை நாள் பட்டினி கிடந்தானோ? சாமிக்குத்தான் தெரியும். ஒரு வீட்டிலே எச்சில் இலையை வெளியே போட்டார்களாம். அதை எடுத்து அந்தப் பையன் ஆவலாகச் சாப்பிடப் போனானாம். அந்தச் சமயம் அங்கே ஒரு நாய் வந்ததாம்!

மீ: ச்சு, பாவம் அது எத்தனை நாள் பட்டினியோ!

வச: பையனுக்கும் நாய்க்கும் அந்த எச்சில் இலைக்காகச் சண்டை நடந்ததாம், நாய்தான் வென்றது. பையனுக்கு நல்ல காயமாம். இப்பொழுது மருத்துவச் சாலையில் கிடக்கிறானாம்!

பிச்: (வெளியிலிருந்து) ஏழைக்குத் துளிகஞ்சி ஊற்றுங்கள். அம்மா! உங்களுக்குக் கோடி புண்ணியம் அம்மா?

மீ: இந்தப் பிச்சைக்கார நாய்களே இப்படித்தான். பிடிவாதக்கார நாய்கள், இதைப் போலே வேறே கிடையாது. அரை மணி நேரமா, நானுஞ் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். "தொண தொண" என்று தொண்டையைக் கிழிக்கிறாள்! நீ சொல்லுகிறதைக் கேட்க விடமாட்டேன் என்கிறாள்! ஆமாம், நீ இதையெல்லாம் சொல்லும் போதே என் மனந் துடியாய்த் துடிக்கிறதே. அங்கேயுள்ள மக்கள் இதையெல்லாம் எப்படித்தான் கண்ணாலே பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை! அவர்கள் மனம் எல்லாம் கல்லா?

வச: அதென்னமோ சனியன், நமக்கு இதெல்லாம் கேட்கவே பரிதாபமாயிருக்கிறது!

பிச்: (வெளியிலிருந்து) சோறு தின்று மூன்று நாளாயிற்று அம்மா! பசிமயக்கமாயிருக்கிறது. கொஞ்சம் பச்சைத் தண்ணீராவது ஊற்றுங்களேன்!

மீ: இந்தச் சனியன் வேறு தொல்லை!........ஏண்டி வசந்தா, அங்கே மக்கள் இப்படிப் படாதபாடு படுகிறார்களே. நாம் ஒன்றும் செய்ய முடியாதாடீ?

வச: ஏனம்மா முடியாது? எல்லாரும் அந்தப் பஞ்ச ஒழிப்புக்கு இங்கேயிருந்து பணம் அனுப்புகிறார்கள். உங்கள் மருமகனும் ஐந்து ரூபாய் அனுப்பியிருக்கிறார். அவர் பேர் கூடப் பத்திரிகையிலே வந்ததே?

மீ: பேர்கூடப் பத்திரிகையிலே வந்ததா? புண்ணியந்தாண்டியம்மா, புண்ணியந்தான்! உன் வீட்டுக்காரருக்குக் கோடி புண்ணியம்! ஏழைக்கிரங்குகிற நெஞ்சமல்லவா அவர் நெஞ்சம்! நான் இரண்டு ரூபாய் கொடுக்கிறேன்; அதையும் அங்கு அனுப்பச் சொல்லடியம்மா.

பிச்: (வாசலிலிருந்து) அம்மா, இரக்கமில்லிங்களா உங்களுக்கு? பச்சைப் பிள்ளை பட்டினியால் வாடுகிறதம்மா!

(வெளியில் உலாவச் சென்றிருந்த நிலக்கிழவர் கையில் ஒரு பிரம்பை வீசிக்கொண்டு வருகிறார்.)

நிலக்கிழவர்: ஏ, பிச்சைக்காரி! என்ன சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறாய்! (பிரம்பை ஓங்குகிறார்) போ, அப்பாலே. (உள்ளே நுழைந்து உடைகளைக் கழற்றிவிட்டு நாற்காலியில் சாய்கிறார். அவருடைய நாய், வாலை ஆட்டிக்கொண்டு வருகிறது) அடே வேலா! நாய்க்குச் சோறு வைத்தாயாடா?

வேலன்: வைத்தேன் ஐயா.

நிலக்: பின்னே ஏண்டா அதற்கு வயிறு குறைந்திருக்கிறது?

வே: (சும்மா இருக்கிறான்)

நிலக்: டைகருக்குப் பால் வைத்தாயாடா?

வே: பூனைக்குத்தானே ஐயா, கால் படி வைத்தேன்

நிலக்: இரண்டுக்கும் கொஞ்சம் ஆட்டுக்கறி வாங்கிக் கொண்டு வர்டா, (எட்டணுவை விட்டெறிகிருர்.)

வச: (கணவனைப் பார்த்து) இன்றைக்கு என்ன செய்தி?

நிலக்: அதை ஏன் கேட்கிருய்? நூற்றைம்பத்தேழு பேரை மருத்துவ சாலைக்குக் கொண்டுபோனுர்களாம். அதில் அறு பத்தெட்டு பேர் இறந்து விட்டார்களாம்! கொடுமை! கொடுமை!

பிச்: (வீட்டு வாசலிலிருந்து நகர்ந்துகொண்டே) எல்லாரும் இதைப் பற்றித்தான் பேசிப் பேசிப் பரிதவிக்கிருர்கள். ஆனுல் எனக்கு ஒரு பிடி சோறு போடுவாரைத்தான் ஒருவ ரையும் காணும்! இங்கேயும் ஒன்றும் போடமாட்டார்கள், போகலாம். என் தலைவிதி!

(வீட்டிற்குள் ஒரு குழந்தை அழுகுரல் கேட்கிறது.)

வச: அம்மா! கண்ணன் அழுகிருன். ஒன்றுஞ் சாப்பிடாமல் படுத்தவன். வெகுநேரமாயிற்று. பசி எடுக்கும், தூக்கம்மா! (வெளியில் ஒரு குழந்தை வீறிட்டலறும் சத்தம் சற்றுத் தூரத்தில் கேட்கிறது, அது பிச்சைக்காரியின் குழந்தை!)

வச: (பைத்தியம் பிடித்தவள்போல்) என்னம்மா செய்து கொண் டிருந்தோம்! வீண் பேச்சும் வெட்டிப் பேச்சும்! ஐயோ! அவள் குழந்தைக்காரியம்மா! அதோபார். அவள் குழந்தை அலறுகிறது! என் குடல் பதறுகிறதே! கூப்பிடம்மா அவளை. எங்கெங்கேயோ பஞ்சம் என்கிறோமே! நம் கண்முன்னுல் இருப்பதையே பார்க்கவில்லையே. என்ன பேதைமை! ஐயோ! கூப்பிடம்மா அவளை. அவள் குழந்தை நம் குழந்தையைப் போலில்லையா? ஐயையோ.
(எழுந்து ஓடுகிருள் வாசலுக்கு.)

பயிற்சி

1. இந்நாடகக் கதையால் நீவிர் அறிவது யாது?
2. இந்நாடகக் கதையை இருபது வரிகளுக்கு மிகாமல் நுஞ் சொந்த வாக்கியங்களில் சுருக்கி வரைக.

11. அமெரிக்கப் பிரயாணம்

[டாக்டர் திரு.ஆர்.கே.சண்முகம் செட்டியார்,பி.ஏ.,பி.எல்.,டி.லிட்.]

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்தபோது, 'நீங்கள் அமெரிக்காப் போயிருப்பதாகக் கேள்விப் பட்டேனே! இதற்குள் திரும்பி வந்துவிட்டீர்களா?' என்று கேட்டார். ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கே ஒரு முக்கிய வேலையை முடித்துக்கொண்டு, ஊருக்குத் திரும்பியாய் விட்டது. சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் வருவதென்றால், போகவும் வரவும் 40 நாட்கள் கடற்பிரயாணம் செய்யவேண்டும். இப்போதோவென்றால், இந்தியாவை விட்டால் மூன்று நாளில் அமெரிக்கா. கோயமுத்தூரிலிருந்து டில்லிக்குப் போவதற்கு எவ்வளவு நாளாகின்றதோ, அவ்வளவு நாள்தான் கராச்சியிலிருந்து அமெரிக்காப் போவதற்கும். விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது.

சென்ற ஜூன்மாதம் ஒரு நாள் காலை 8 மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டிலிருந்தபோது, கவர்னர் அவர்களுடைய ஆபிசிலிருந்து டெலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில் அமெரிக்காவில் ஓர் உலக மகாநாடு சமீபத்தில் கூடப் போவதால், அந்த மகாநாட்டிற்கு இந்திய கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நானும் போகமுடியுமா? என்று கேட்டார்கள். நானும் சரி என்று ஒப்புக்கொண்டேன். ஆகாயக்கப்பல் வழியாகப் பிரயாணத்திற்குத் தயாராக இருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்துவிட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாயக் கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான் தயாரிப்பது வெகுசுலபம். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக் கட்டவேண்டுமோ அதில் பகுதியும்கூடத் தேவையில்லை. அமெரிக்காப் பிரயாணத்திற்குப் படுக்கையும் உணவுப் பாத்திரமும் வெள்ளிக் கூஜாவும் வேண்டாம்; ஆகாயக் கப்பலில் 65 ராத்தல் எடைக்குமேல் எடுத்துக்கொண்டு போக முடியாது. உடுப்புகள் அடங்கிய ஒரு பெட்டியும் சில புத்தகங்கள், பேனா,

காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறு பையும் இருந்தால் போதும். படுக்கை அவசியமில்லையா என்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பர் கேட்டார். மேல்நாட்டுப் பிரயாணங்களுக்கு இஃது அவசியமில்லை. கப்பலோ, ரயிலோ, ஓட்டலோ, நண்பர்களுடைய வீடுகளோ எங்கே போனாலும் படுக்கைவசதி அவ்விடமே இருக்கும். உடுப்புக்களின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டியதில்லை. ஓர் ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக்கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால் வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று மாலையிலேயே ஆடைகள் திரும்பி வந்துவிடும். இந்த வசதியிருக்கும்போது, சில ஆடைகள் மட்டும் கைவசமிருந்தால் போதும்.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியிலிருந்து புறப்படுகின்றது. சென்னையிலிருந்து கராச்சிக்குப்போக, விமான வழியாகவே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு நாள் பகல் 2 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டேன். அன்று மாலை 5 மணிக்கெல்லாம் ஐதராபாத் போய்ச் சேர்ந்துவிட்டேன். அன்றிரவு ஐதராபாத்தில் தங்கிவிட்டு மறுநாள் மாலை $7\frac{1}{2}$ மணிக்குப் புறப்பட்டதும், பகல் $12\frac{1}{2}$ மணிக்குப் பம்பாய் வந்தாகிவிட்டது. பம்பாயிலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டு மாலை 5 மணிக்குக் கராச்சியும் சேர்ந்தாகிவிட்டது. மறு நாள் காலை அமெரிக்காவுக்குப் புறப்படும் விமானத்தில் நானும் என்னுடனிருந்த நண்பர்களும் ஏறினோம். 25 பிரயாணிகள் உட்காரும்படியான பெரிய விமானம் அது. விமானத்தை ஓட்டும் மாலுமி, இஞ்சினியர் முதலியவர்கள் 6 பேர். இஃதல்லாமல், ஏராளமான சாமான்களும் நிரம்பியிருந்தன. இவ்வளவு பாரத்தையும் எடுத்துக் கொண்டு, அதிகாலையில் 7 மணிக்குக் கராச்சியை விட்டுக் கிளம்பிற்று விமானம்.

ஆகாயத்தில் தரைமட்டத்திலிருந்து 12,000 அடிகளுக்கு மேல் விமானங் கிளம்பிவிட்டது. கடலையும், மலைகளையும், பிரதேசங்களையும் தாண்டி மேக மண்டலத்திற்குமேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்குமேலே போய்க்கொண்டிருந்தது. கராச்சியை விட்டதும், அடுத்த தங்கல், அரேபியாவின் கோடியிலுள்ள ஏடன் பட்டினத்தில். கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1700 மைல் தூரம். கப்பலில் போகவேண்டுமென்றால், 5 நாட்

களாகும். காலையில் காராச்சியை விட்டும் பகல் சாப்பாட்டிற்கு ஏடன் சேர்ந்தாகிவிட்டது. சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஏடனை விட்டுப் புறப்பட்டதும், அன்று இரவுச் சாப்பாடு கார்டூன் என்னும் பட்டினத்தில். இஃது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கியப் பட்டினம்.

கார்டூன் பட்டினத்தில் இரவுச் சாப்பாடு முடிந்தவுடன், அங்கே இராத்தங்கல் ஏற்படும் என்று நினைத்திருந்தோம். ஆனால் இராத்தங்குவது என்னும் ஏற்பாடில்லை. இரவு 9 மணிக்கே கார்டூனிலிருந்து விமானங் கிளம்பி விட்டது. ஆகாயத்திற் பறப்பதற்குப் பகலாயிருந்தாலென்ன, இரவாயிருந்தாலென்ன? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிறோம். 12,000 அடிகளுக்குக் கீழ் ஆப்பிரிக்கா கண்டத்தின் அடர்ந்த காடுகளும், விரிந்த வனாந்தரங்களும், உயர்ந்த மலைகளும்! இரவு முழுவதும் விமானம் போய்க்கொண்டே இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந்தோம். விமானம் இருளில் போய்க்கொண்டிருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றினவுடன் கீழே பார்த்தால், ஒரே வனாந்தரம்! காலை 9 மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல்பாகத்திலுள்ள ஆக்ரா என்னும் பட்டினத்தில் விமானம் இறங்கிற்று. கார்டூனிலிருந்து ஆக்ராவுக்கு 2800 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரே இரவில் கடந்தாகிவிட்டது.

ஆக்ராவை விட்டால், அதற்கு மேல்புறம், அட்லாண்டிக் கடலைத் தாண்டவேண்டும். ஒரு கரையில் ஆப்பிரிக்காக் கண்டம், மறு கரையில் தென் அமெரிக்காக் கண்டம். இவை இரண்டிற்கும் நடுவில் 2800 மைல் ஒரே கடல் மயம்! இந்தக் கடலின் மத்தியில் அசென்ஷன் என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ராவிலிருந்து அசென்ஷன் தீவுக்கு 1300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத்தாண்டி, அந்தத் தீவுக்கு அன்று மாலையிலேயே வந்தாகிவிட்டது! அன்றிரவு அந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசைகளில் நாங்களும் தங்கினோம். மறுநாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்காவில் உள்ள நெட்டால் என்னும் பட்டினத்தைச் சேர்ந்தோம். தென் அமெரிக்காவிலிருந்து வட அமெரிக்காவுக்கு ஒரே நாளில் பிரயாணம் முடிந்துவிட்டது

சனிக்கிழமை காலை 7 மணிக்குக் கராச்சியிலிருந்து புறப் பட்டோம். செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அமெரிக்காவி லுள்ள மியாமி என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில், ஆசியாக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பிரயாணத்தை முடித்தாகி விட்டது.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறு பாடடையும். மனித வாழ்க்கையும் மனப்பான்மையும் புரட்சி யடையும். இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு ஒரே நாளில் போவதென்றால், இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் அண்டை வீட்டார்போல் ஆகிவிட்டார்கள்! உலக மக்கள் எல்லோரும், ஒரு நாட்டின் மக்களைப் போன்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள். 'மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் புதல்வர்கள்' என்னும் தத்துவம், விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையின் உண்மை யாகவே ஆகிவிட்டது.

அமெரிக்காவுக்கு நான் பிரயாணம் செய்ததின் நோக்கம் ஒரு மகாநாட்டின் விஷயமாக. நாணய செலாவணி விஷயமாக யோசித்து முடிவு செய்வதற்கு 44 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு ஒன்று "பிரிட்டன் வுட்ஸ்" என்னுமிடத்தில் ஜூலை மாதம் முதல் தேதி கூடிற்று. உலகத்திற்குப் பொதுவான சில பொருளாதார விஷயங்களைப்பற்றி யோசித்து முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்த மகாநாடு, ஜனாதிபதி ரூஸ்வெல்டினால் கூட்டப்பட்டது. உலகத்தின் சண்டைக்குக் காரணம் வறுமை. இந்தச் சண்டைக்குப் பின் உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்பட வேண்டுமென்றால், உலக மக்களின் வறுமையைப் போக் கும் வழிகளைத் தேடவேண்டும் என்று எல்லோருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவைதாம் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்குதடையின்றி மற்ற நாடுகளுக்குப் போகும் வசதிகள் இருந்தால்தான் எல்லா நாடு களும் செழிப்படைந்திருக்க முடியும். சமீபகாலத்தில் இவ்வித மான வர்த்தகத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டிருக் கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் நாட்டின் அபி

விருத்தியைக் கருதி அயல் நாட்டுச் சரக்குகள் வரக்கூடாமல் இருப்பதற்குச் சுங்கங்களையும், வரிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதல்லாமல் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்குமுள்ள நாணய மாறுதலாலும், வியாபாரத்திற்குத் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. ஒரு நாணயத்திற்கும் மற்ற நாணயங்களுக்கும் நிகரான விகிதம் இருந்தால்தான் வியாபாரம் தடையில்லாமல் நடக்கும். ஒரு பவுன் என்றால் அது 4 டாலருக்குச் சமானம். இந்த விகிதம் நிகராக நிலையாக இல்லாமல் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தால் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் வர்த்தகம் நடத்துவது கடினம். வர்த்தகர்களுக்குக் கஷ்டமும் ஏற்படும். நாணய விகிதங்களை மாறாமல் நிகராக்கவும், கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதன உதவி எளிதில் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்கவும் வேண்டிய வழிகள்தான், இந்த மகாநாட்டில் நிர்ணயிக்கப்பட்டன.

பயிற்சி

1. விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கி விட்டது. இதனைச் சான்றுகாட்டி விளக்குக.
2. இக்கட்டுரையாசிரியர் அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்த காரணம் யாது?
3. ஆகாயவிமானப் பயணத்திற்கு வேண்டிய பொருள்கள் யாவை?
4. கார்டூனிலிருந்து ஆக்ரா என்னும் பட்டினத்தை அடைய விமானம் எவ்வெவற்றைக் கடக்க வேண்டும்?
5. "மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் புதல்வர்கள்" என்ற தத்துவம் விஞ்ஞானத்தின் மகிமையால் உண்மையாகி விட்டது. இதனை விளக்குக.
6. சென்னையிலிருந்து அமெரிக்காவிற்கு ஆகாயவிமான மூலம் பயணம் செய்வது குறித்துப் பதினறு வரிகளுள் கட்டுரை வரைக.

12. தேசீய மாணவர் படை

ஒரு தேசத்தின் முற்போக்கு அதன் இளைஞர்களின் கையில் இருக்கிறது. இளைஞர்கள் சீராக இருந்தால் தேசத்தின் முற்போக்கு நிச்சயம். எனவே வருங்கால வாழ்க்கையில் நன்கு பயன்படுவதும், அவர்களைத் தேசத்தின் சிறந்த பிரஜைகளாக ஆக்குவதுமான பயிற்சியை நம் இளைஞர்களுக்கு அளிப்பது அவசியம். இப்பயிற்சியின் நோக்கம் அவர்களின் ஒழுக்கம், மனோபலம், தேகதிடம் ஆகியவற்றின் பண்புகளை அபிவிருத்தி செய்வதாகும். பிற்காலத்தில் அதன் மூலம் அவர்களைத் தேசத்தின் சேவையில் எந்தப் பொறுப்பையும் வகிப்பதற்குப் பொருத்தமானவர்களாக ஆகும்படி செய்யவேண்டும். இப்பயிற்சியை அவர்களுக்கு இளம் பருவத்திலேயே ஊட்டுவதற்குச் சரியான இடம் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் தான். அங்கேதான் சமுதாயத்தின் மிகச்சிறந்த மலர்கள் என்று கூறக்கூடிய இளைஞர்கள் கிடைப்பார்கள். அவர்கள்தான் தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளும் ஆவார்கள்.

இத்தகைய பயிற்சி அளிக்கும் பொறுப்பைத் தேசீய மாணவர் படை (நேஷனல் கேடட் கோர்) மேற்கொண்டிருக்கிறது. இப் பயிற்சியின் முழுப்பலன் தெரிவதற்கு இன்னும் சில வருடங்கள் பிடிக்கும். சென்ற நான்கு வருஷ காலத்தில் பயிற்சிபெற்ற சிறுவர், சிறுமிகளும் இப்பொழுது பயிற்சி பெறுகிறவர்களும் தேசத்தின் பல திறப்பட்ட வாழ்க்கைத் துறைகளில் கலந்து கொள்ளும்போது தான் இப் பயிற்சியின் மூலம் ஏற்பட்ட அரிய குணங்களின் பலன்கள் வெளிப்படும். இப்பயிற்சி விசேஷமாக ஒரு துறைக்கும் அவர்களைப் பயில்விக்க வில்லை. ஆனால் பயனுள்ள நல்ல எதிர்கால வாழ்விற்கு அது ஸ்திரமான அஸ்திவாரத்தை அமைக்கிறது.

1948-இல் அமைக்கப்பட்ட இந்தத் தேசீய மாணவர் படையானது தேச மக்களின் மனத்தை அதிகமாகக் கவர்ந்திருக்கிறது அதன் லட்சியங்களையும், நோக்கங்களையும் மக்கள் முழுவதும் உணரத் தொடங்கிய பிறகு பள்ளிக்கூடங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் அதில் சேர முன் வருபவர்களின் எண்ணிக்கைக்கும் குறைவேயில்லை. நிதி வசதி அதிகமாக இருந்திருக்குமானால், அஃது இப்போது இருப்பதைவிட இன்னும் பன்மடங்கு விஸ்தாரம் அடைந்திருக்கும். இப்போதும் கூட அது பல விதங்களிலும் முன்

னேற்ற மடைந்துள்ளது. இதன் பயிற்சித் திறமைக்குச் சான்றாக ஓர் அம்சத்தைக் குறிப்பிடலாம். டேராடூனில் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் தேசியப் பாதுகாப்புக் கழகத்தில் உள்ள ஏராளமான மாணவர்கள், தேசிய மாணவர் படையில் பயிற்சி பெற்று நேரடியாகத் தேசிய மாணவர் படைக்கு ஒதுக்கப்பட்டுள்ள விகிதாசாரப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். வழக்கமான தேர்ந்தெடுப்பு முறைகளின்படி அனுமதிக்கப் பட்டவர்களிலும் பெரும்பான்மையோர் தேசிய மாணவர் படையில் பயிற்சி பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆனால், தேசிய மாணவர் படையானது அது பயிற்சியளிக்கும் ஒவ்வொரு பையனையும், பெண்ணையும் ஒரு போர் வீரராக மாற்றும் நோக்கம் கொண்டிருக்கவில்லை. அதன் நோக்கம்: முதலாவதாக, ஒழுக்கம், தோழமைப் பண்பு, சேவை உணர்ச்சி, தலைமை வகிக்கும் ஆற்றல் ஆகிய குணங்களை யுவர்களிடையிலும், யுவதிகளிடையிலும் உண்டு பண்ணுவதேயாகும்; இரண்டாவதாக, தேசத்தின் பாதுகாப்புப் படைகளில் இளைஞர்களுக்கு அக்கறை ஏற்படும்படி செய்வதற்காக அவர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதாகும்; மூன்றாவதாக, நெருக்கடி காலங்களில் போர்ப்படைகள் துரிதமாக விஸ்தார மடைவதற்கு ஏற்றவகையில் பயிற்சி பெற்ற ஊழியர்களின் தனிப்பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்திவைப்பதாகும். இதிலிருந்து தேசிய மாணவர் படையானது பையன்களுக்கும் பெண்களுக்கும் கல்வி நிலையங்களில் போதிக்கப்படுகின்ற கல்வியுடன் முக்கியமான புதிய தொரு பயிற்சியை அளித்துக் கல்வித் துறையில் அவர்களுக்கு அதிக சேவை செய்கிறது என்பது விளங்கும்.

தேசிய மாணவர் படைப் பிரிவுகள்

தேசிய மாணவர் படையில் சீனியர் பிரிவு, ஜூனியர் பிரிவு, பெண்கள் பிரிவு என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. சீனியர், ஜூனியர் பிரிவுகளில் ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகிய முப் பிரிவுகளின் பகுதிகள் இருக்கின்றன. ராணுவப் பிரிவில் கவசப் படை, பீரங்கிப் படை, எஞ்சினியர்ப் படை, சமிக்ஞைப் படை, காலாட் படை, மின்சார-யந்திர நுட்ப எஞ்சினியர் படை, வைத்தியப் படை ஆகிய கூறுகள் இருக்கின்றன.

சாதாரணமாக அளிக்கப்படுகின்ற அடிப்படைப் பயிற்சியுடன், தொழில் நுட்ப விஷயங்களில் அக்கறையுள்ளவர்கள் அப்பயிற்சியில் அளிக்கப்படுகின்ற விசேஷப் பிரிவுகளில் சேரலாம். கடற்படைப் பிரிவுகள், கடற்படைப் பயிற்சி சுலபமாகக் கிடைக்கக் கூடிய கடலோர நகரங்களில்தான் அமைக்கப்படுகின்றன. விமானப் படைப் பிரிவில் பாடபோதனையும் விமானத்தில் பறந்து செல்லும் அனுபவப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. விமானக் கிளப்புகளின் உதவியுடன் இப் பயிற்சியாளர்களுக்கு சர்க்கார் செலவில் "ஏ" லைசென்ஸ் கிடைக்க வசதிசெய்யப்படுகிறது. தேசமுழுவதிலுமுள்ள கல்லூரிகளிலும், சர்வகலாசாலைகளிலும் பல்வேறு ரகப்படைப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சீனியர் பிரிவில் இப்போது 800 அதிகாரிகளும் 25,000 மாணவர்களும் இருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் இரண்டு சீனியர் பிரிவுகளும் 26 ஜூனியர் பிரிவுகளும் உள்ள கடற்படைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது முக்கிய நிகழ்ச்சியாகும்.

ஜூனியர் பிரிவிலுள்ள பிரிவுகள் பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இப்போது அதில் 1,500 அதிகாரிகளும் 52,000 மாணவர்களும் இருக்கிறார்கள்.

பெண்கள் பிரிவு

பெண்கள் பிரிவை ஏற்படுத்தியதன் நோக்கம் யுவதிகளுக்குச் சிறந்த தேகக் கட்டையும் தன்னம்பிக்கையையும் உடல் வலிமையையும் உண்டு பண்ணுவதுதான். தேசிய நெருக்கடி காலங்களில், சாதாரணமாக, ஆண்கள் செய்யக்கூடிய வேலைகளை அவர்களுக்குப் பதிலாக இவர்கள் மேற்கொள்ளும்படி செய்யத் தயார் செய்வதும் ஒரு நோக்கமாகும். தற்போது பெண்கள் பிரிவினில் ஒருசில பிரிவுகள்தான் இருக்கின்றன. ஆனால் அவை மிக நன்றாக வரவேற்கப் பட்டுள்ளன. எனவே இன்னும் அதிகப் பிரிவுகளை ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இப்பொழுது பெண்கள் பிரிவினில் 17 அதிகாரிகளும், 500 மாணவிகளும் இருக்கிறார்கள்.

பயிற்சித் திட்டம்

பயிற்சித் திட்டத்தில் கட்டுப்பாடு, தலைமை வகிக்கும் ஆற்றல், கூட்டு வாழ்க்கை, நன்னடத்தை ஆகியவை வலியுறுத்தப்படும்.

மாணவர்களின் சுகாதாரம் நன்கு கவனிக்கப்பட்டு அவர்கள் தேக திடத்துடன் இருக்கும்படி கவனிக்கவேண்டும். இதற்காக விளையாட்டுகள், பொழுது போக்குகள் முதலியவைகளுக்குப் பயிற்சி முகாம்களில் அதிக வசதி செய்யப்படுகிறது. கூட்டு வாழ்க்கைக்கு வழி செய்வதானது இப்படையின் முக்கிய சேவை. ஒரே கோஷ்டியாகச் சேர்ந்து தோழமை உணர்ச்சியுடன் பணியாற்றுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. மதம், ஜாதி, வர்ணம் முதலிய வித்தியாசங்களே இல்லாதது போலவே அவர்கள் வேற்றுமையின்றிப் பணியாற்றுகிறார்கள்.

இந்த ஸ்தாபனத்தைப் பொதுமக்களுடன் அதிகத் தொடர்பு கொள்ளுமாறு செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் ஜனவரி 27-ஆம் தேதி தேசிய மாணவர் படைதினம் கொண்டாட முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

பல்வேறு ராஜ்யங்களிலுமுள்ள தேசியமாணவர் படைப் பிரிவுகள் குடியரசுதின அணிவகுப்புகளில் கலந்துகொள்ளும். ஒவ்வொரு வருஷமும் வட்டாரப் போட்டி விளையாட்டுகள் நடத்தப்படும். பல்வேறு பிரிவுகளிடையே நல்ல முறையில் போட்டி உணர்ச்சி ஏற்படும்படி செய்வதுதான் அதன் நோக்கம். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். சிறந்த பிரிவுக்குப் பரிசு உண்டு.

பொதுஜன சேவை

ஏற்கெனவே தேசிய மாணவர் படையினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயனுள்ள சமூக சேவை செய்திருக்கின்றனர். இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு சர்வதேச மகாநாடுகளில் அவர்கள் அருந் தொண்டாற்றியிருக்கிறார்கள். பஞ்சம், வெட்டுக்கிளிப் படையெடுப்பு முதலிய நெருக்கடி காலங்களில் அவர்கள் மக்களுக்குச் சேவை செய்ய முன் வந்திருக்கின்றனர். சுயேச்சையாகவே கிராம மக்களுக்குச் சேவை செய்வதற்கும் அவர்கள் வருஷாந்தர முகாம் கூடும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கௌஹாத்திக்கு அருகில் 800 மாணவர்கள் ஒருமைல் நீளமுள்ள ரஸ்தாவை அமைத்து மலை ஜாதி மக்களின் நன்றியைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இதேபோல், சென்னை, பம்பாய், டில்லி

முதலிய ராஜ்யங்களிலும் அவர்கள் கிராம வாசிகளுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

சுருக்கமாகக் கூறுவதானால் தேசிய மாணவர்படை தேசத்தின் எதிர்காலத்துக்கு நன்மை செய்யக் கூடியதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒரு ஸ்தாபனமாகும். அதன் வெற்றி நமது இளைஞர்களின் ஆர்வத்தையும் பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கிறது. இதுவரையில் இளைஞர்களும் நாட்டு மக்களும் தேசிய மாணவர்படைக்குச் சரியான முறையில் ஆதரவும், ஊக்கமும் காட்டி வந்திருப்பதே எதிர்காலத்திற்கு ஒரு நன்னிமித்தமாகும்.

பயிற்சி

1. தேசிய மாணவர் படை தோற்றுவிக்கப் பட்டதன் மூன்று நோக்கங்கள் யாவை?
2. சீனியர் பிரிவு, ஜூனியர் பிரிவு இவற்றின் தன்மைகள் யாவை?
3. பெண்கள் பிரிவினைப் பற்றி நீவிர் அறிவது யாது!
4. தேசிய மாணவர் படை பொதுஜனத் தொடர்பு கொள்வதற்கு யாது செய்யப்பட்டுள்ளது?
5. தேசிய மாணவர் படையினர் செய்துள்ள பொதுஜன சேவைகள் சிலவற்றை எழுதுக.

குறிப்புரை

I. வாழ்த்துப் பகுதி

1. தாயுமானவர் பாடல்

தாயுமானவர் : இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டு. பிறந்த ஊர் - திருமறைக்காடு. வேளாளர் மரபு. சைவசமயம். இவரது பாடல்கள், எளிமையும், இனிமையும், சமரச நோக்கமும் உடையவை. இப்பாடல் பரம்பொருளை வேண்டிக்கொள்வதாகும். பர தெய்வம் - மேலான தெய்வம். பரஞ்சோதி - சிறந்த ஒளி வடிவு மானவன். சுகவாரி - இன்பக் கடலாக இலங்குபவன்.

2. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

நாலாயிர திவ்வியப் பிரபந்தமென்பது பன்னிரண்டு ஆழ்வார்கள் திருமாலைப் பற்றிப் பாடிய பாடல்களின் தொகுதியாகும். அதனுள் இத்திருப்பாடல் திருமாலை என்னும் பகுதியைச் சார்ந்தது. இதன் ஆசிரியர் திருமண்டங்குடியில் அந்தணர் குலத்தில் தோன்றிய தொண்டரடிப் பொடியாழ்வார் ஆவர். காலம் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல் திருப்பள்ளியெழுச்சியாகும். கமலம் - தாமரை. அச்சுதன் - திருமால். அமரர் - தேவர். ஏறு - ஆண்சிங்கம். ஆயர் - இடையர்.

3. மகம்மது நபி

இதன் ஆசிரியர் தற்காலத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள். இவர் தாய்மொழி, தாய்நாடு, சைவசமயம், தொழிலாளர் இயக்கம் முதலிய பல துறைகளிலும் தொண்டாற்றிய பெருந்தகையாளர். இவர் கணக்கற்ற கட்டுரைகளையும், கவிதைகளையும் இயற்றி யுள்ளார். இவரது தோற்றம் 1883. மறைவு 1953.

4. கிறிஸ்து வணக்கம்

இதன் ஆசிரியர் வித்துவான், எ. கிருஷ்ணபிள்ளை அவர்கள். பாளையங்கோட்டைக்கு அண்மையிலுள்ள ரெட்டியார்பட்டி என்னும் கிராமத்தில் 1827-ஆம் ஆண்டில் தோன்றினர். பின்னர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். இயற்றிய நூல்கள் - இரட்சணிய சரிதம், இரட்சணிய மனோகரம் முதலியன.

ஞானம் - அறிவு. ஈதல் - கொடுத்தல். கருதில் - நினைத்தால். இருமை - இம்மை மறுமை. நாமம் - பெயர்.

II. அறவுரைப் பகுதி

1. திருக்குறள்

தமிழ்மறை, பொதுமறை என்றெல்லாம் போற்றப்படும் இந் நூலின் ஆசிரியர் திருவள்ளுவர். இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. திருவள்ளுவமாலை என்பது இதன் பெருமையை உணர்த்துவதாகும். பலமொழிகளிலும் பெயர்த்தெழுதப் பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு. அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பெரும் பிரிவுகளை யும் 133 அதிகாரங்கள் என்ற உட்பிரிவுகளையு முடையது.

காலமறிதல்

1. கூகை - கோட்டான். இகல் - மாறுபாடு. எடுத்துக்காட்டுவமையணி. 2. ஆர்க்கும் - பிணிக்கும். 3. அருவினை - அரிய வினைகள் என்பன. 4. ஞாலம் - பூவுலகம். 5. கலங்காது - தவறுமல். 6. பொருதகர் - சண்டை செய்கின்ற ஆட்டுக்கடா. தகைத்து - தன்மைத்து. 7. பொள்ளென - விரைவாக. புறம் - வெளியே. வேரார் - கோபியார். 8. செறுநரை - பகைவரை. 9. இயைந்தக்கால் - வந்து கூடியபொழுது. 10. கொக்கு ஒக்க - கொக்குபோல் இருக்க.

பொச்சாவாமை

பொச்சாவாமை - மறவாமை. 1. இறந்த வெகுளி - அளவு கடந்த கோபம். 2. பொச்சாப்பு - மறதி. 3. துணிவு - ஒப்ப முடிந்தது. 4. அரண் - அரண்களால் ஏற்படும் பயன். 5. காவாது - தடுக்காது. 6. இழுக்காமை - மறவாமைக் குணம். யார் மாட்டும் - யாவரிடத்தும். 7. போற்றி - எண்ணி. 8. எழுமையும் - எழு பிறப்பிலும். இல் - நன்மை இல்லை. 9. மைந்துறும் போழ்து - வலியுறும்போது. உள்ளுக - நினைக்க. 10. எளிது மன் - எளிது.

2. நாலடியார்

இந்நூல் சமண முனிவர் பலரால் பாடப்பட்டது. இதுவும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. நாலடி வெண்பாக்களாலாகிய நூல் என்பது பொருள். ஆர் சிறப்புவிகுதி. பிற்காலத்தவரான பதுமனார் என்பவர் பால் இயல் முதலிய பாகுபாடு செய்தார். "நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி" என்பதில் நாலு என்பது நாலடியாரைக் குறிக்கும்.

1. வைப்பு உழி - வைக்கப்பட்ட இடத்தில். கோட்படா - பிற ரால் கவரப்படமாட்டா. எச்சம் - செல்வம். விச்சை - கல்வி. இச்செய்யுள் வேற்றுமை யணியாகும். 2. களர் நிலம் - உவர் நிலம். விழுமிதா - சிறந்ததாக. 3. ஒருவனுடைய உயர்வு தாழ் வுக்கு அவனுடைய அறிவும் அறிவின்மையுமே காரணம் என்ற வாறு. 4. தொல்சிறப்பின் - பழமையான சிறப்பையுடைய. ஒண்ணிறம் - ஒளி பொருந்திய நிறத்தையுடைய.

3. புறநானூறு

இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. இந்நூலிலுள்ள பாடல்கள் பலரால் பாடப்பட்டவை. இதனால் பண்டைத் தமிழரின் நாகரிகம் கலாசாரம் முதலியவற்றை அறிய முடிகிறது. இப்பாட லாசிரியர் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன்.

1. உறுபொருள் - மிக்க பொருள். முனியாது - வெறுக்காமல் திரியும் - மாறுபடுவாள். இதனால் கல்வியின் பெருமை உணர்த் தப்பட்டது.

4. நீதிநெறி விளக்கம்

இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள். சுமார் முன்னூறு ஆண்டுகட்கு முற்பட்டவர். பிறந்து ஐந்து வயதுவரை மூங்கைத் தன்மையுடனிருந்தார். பின்னர், திருச்செந்தூர் முருகப் பிரானரு ளால் மூங்கைத் தன்மை நீங்கப் பெற்றுக் கவி பாடு மாற்றலும் பெற்றார். மதுரை யரசர் திருமலை நாயக்கரது வேண்டுகோளுக் கிணங்கி இந் நூலைப் பாடியருளினர்.

1. களிறு - ஆண்யானை. உய்யும் - பிழைக்கும். அயின்று - தின்று. இனை - சுற்றம். 2. ஓம்புக - பாதுகாக்க. மன்ற - நிச்சய மாக. 3. வெகுளினும் - கோபித்தாலும். போா - அகலா. பாகு - யானைப் பாகர். அமைச்சு - அமைச்சர். 4. வேத்தவை - அரசவையை. உவப்பு - உளமகிழ்ச்சி. மா - பெரும், தகைய - தகுதிவாய்ந்த. பூணை - பூனை. கந்து - கட்டுத்தறி. பூட்கை - வலிமை வாய்ந்த.

III. கதைப் பகுதி

1. நள வெண்பா

இதன் ஆசிரியர் புகழேந்திப் புலவர். "வெண்பாவிற் புக ழேந்தி" என்று பாராட்டப்பட்டவர். பன்னிரண்டாம் நூற்றாண் டில் வாழ்ந்தவர். தொண்டை நாட்டைச் சார்ந்த பொன் விளைந்த களத்தூரில் வேளாளர் குலத்தில் தோன்றினர். மன்னுவ நாட்டை

யாண்ட "சந்திரன் சுவர்க்கி" என்ற சிற்றரசனால் கௌரவிக்கப் பட்டவர்.

நளவெண்பா சுயம்வரகாண்டம், கலிதொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் என்ற பிரிவுகளையுடையது. நமது பாடப் பகுதி முதற்பிரிவிலிருந்து எடுக்கப்பட்டது.

1. காமர் - அழகு. கயல் - மீன். காவி - நீலோற்பலம். செம்மை+தேன்=செந்தேன். 2. தாரான் - மாலையையுடையவன் (நளன்) அவிழ்பூ - வினைத்தொகை. பசுமை+கிளி=பைங்கிளி. 3. வதனம் - முகம். பூ+குவளை=பூங்குவளை. 4. தாள்+நிறம்= தாணிறம். மாண்+நிறம்=மாணிறம். அப்பு+உள்=அப்புள்-தண்ணீரில். முளரி - தாமரை. 5. மேதிக்குலம் - எருமைக் கூட்டம். 6. குழாம்-கூட்டம். வல்லியர்கள் - வல்லிக்கொடி போன்ற பெண்கள். கோ - அரசன். 7. ஆயிழையார் - ஆய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த பெண்கள். வான்கிளை - பெரிய சுற்றம். 8. அஞ்சல்- பயப்படாதே. மணிநடை - அழகிய நடை. விஞ்சியது - சிறந்தது. களிவண்டு - வினைத்தொகை. 9. செய்ய - சிவந்த. திரு - இலக்குமி. தையல் - பெண். 10. அடு - கொல்லும். இழை - நகை. நுதி - கலப்பை. கொம்பு - பூங் கொம்புபோன்ற தமயந்தி ; உவமையாகு பெயர். 11. நாற்குணம் - நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு. நாற்படை - தேர், பரி, கரி, காலாள். ஆர்க்கும் - ஒலிக்கும். அணி - அழகிய. இச்செய்யுள் உருவக அணி. 12. என்+ நாடல் = என்னுடல். நன்மை+நுதல்=நன்னுதல். 13. தண்ணளியான் - குளிர்ந்த அருளையுடையவன். 14. மறம் - வீரம். திண்மை+தோள்=திண்டோள் - பண்புத் தொகை. 15. உறையும் - வசிக்கும். ஆதி - ஆவாய். பாவை - (பொம்மை போன்ற) தமயந்தி ; உவமையாகு பெயர். 16. கொற்றவன் - அரசன். உற்றதுவும் - நிகழ்ந்ததையும். 17. கடல்+தானை = கடற்றானை. தானை - சேனை. வில்லியர் - வில்லையுடைய வீரர்கள். நகர் - குண்டினபுரம். 18. விழித்தாமரை - உருவகம். இப்பாடலில் உருவக அணியும் உவமையணியும் பொருந்தியுள்ளன. 19. இன்னபரிசு - இத்தகையது. கொடி - தமயந்தி. 20. ஈரிருவர் தேவர். 1. இந்திரன், 2. வருணன், 3. யமன், 4. அக்கினி. மாசு - குற்றம், பூ+குழலாள்=பூங்குழலாள். குழல் - கூந்தல். காணு - கண்டு. 21. கடிமாலை - மணமாலை. அருள் - வியங்கோள் வினைமுற்று. 22. காசினி - பூமி. நன்னுதல் - இலக்குமி. நறும் - மணம் பொருந்திய. 23. வெள்கி - வெட்கப்பட்டு. ஞாலம் - உலகத்தார் ; இடவாகுபெயர். களி - மகிழ்ச்சி. மாலை - மயக்கம். வயம்- வெற்றி. பொன் - இலக்குமி போன்ற தமயந்தி ; உவமை யாகு பெயர்.

2. குசேலோபாக்கியானம்

இதன் ஆசிரியர் வல்லூர் தேவராசப் பிள்ளை. ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முற்பட்டிருந்தவர். குசேல+உபாக்கியானம். உபாக்கியானம் - கிளைக்கதை. பாகவதத்தில் வரும் குசேலனைப் பற்றிய கிளை வரலாறு. கந்தை யாடையை அணிந்திருந்தமையால் குசேலர் என்ற காரணப்பெயர் உண்டாயிற்று. ''சுதாமர்' என்பது இயற் பெயராகும்.

கதைப்பகுதி - இருபத்தேழு குழந்தைகளுடன் வறுமையில் உழன்ற குசேலரை அவரது மனைவி சுசிலை என்பாள் துவாரகைக் கிறைவனும், இளமைக் காலப்பள்ளி நண்பனுமான கண்ணனைக் கண்டுவருமாறு தூண்டினாள். அவ்வாறே புறப்பட்டுக் குசேலர் கண்ணனரண்மனை வாயிலடைந்து, வாயிற்காவலரிடம் அறிவித் தார். அவ்வாயிற் காவலர் குசேலரது வருகையைக் கண்ணனுக்கு அறிவிக்கின்றனர்.

1. மாமறை - சிறப்புப் பொருந்திய வேதங்கள். காமர்—விருப்பம். தரியலர் - பகைவர். தோம் - குற்றம். 2. அருங்கலை - அருமை+கலை; பண்புத்தொகை. போதவும் - மிகவும். கோது - குற்றம். இயம்பினான் - சொன்னான். 3. என்பு-எலும்பு. யாக்கை- உடல். கழல் - வீரர் அணியும் காலணி. 4. உவகை - மகிழ்ச்சி. எழில் - அழகு. பொன்றல் - கெடுதல். 5. நிருபன் - அரசன். பன்னரும் - சொல்வதற்கு அரிய. 6. குழவி - குழந்தை. இளமை + குழவி = இளங்குழவி. கேயம் - அன்பு. 7. மிடியன் - வறுமையுள்ளவன். சேமவைப்பு - புதையல். வெப்பு உழலுவோன் - வெம்மையால் வருந்துவோன். 8. எண் அனைக்கு - எல்லோராலும் மதித்தற்கரிய திருமகளுக்கு. திகிரி - சக்கரப்படை. புரக்கும் - காக்கும். தாமம் - மாலை. 9. தரிசனம் - சேவை. பெறலரும் - பெறுதற்கு அரிய. 10. மனைக்கிழத்தி - மனைவி. உஞற்றுவள் - செய்பவள். நீர்மையள் - தன்மையள். 11. பைங்குதலை - பசுமையான மழலைச் சொல். சிங்கல் - குறைவு. 12. இவர்கின்ற - விரும்புகின்ற. இருங்கலை - பெரிய கலைகள் (கலைகள் 64 என்பர்). 13. பந்தனை - பிறப்புக்குக் காரணமான பாசம். இன்னே - இப்பொழுதே. பக்கணம் - சிற்றுண்டி. 14. மலிதரும் - மிகுந்த. பொதி - முடிச்சு. காதல் - அன்பு. 15. செறிதருசுவைத்து - நிறைந்த சுவையை உடையது. 16. முட்டை - பக்குவமற்றது. அம் கை - அழகியகை. குளம் - வெல்லம். அம்ம - வியப்பிடைச் சொல். 17. கதிர் - சூரியன். எழீஇ - எழுந்து. முற்றி - முடித்து. மதிகுலம் - சந்திரவம்சம். கேளான் - கேளாதவனுய், திதியம் - செல்வம்.

3. இரட்சணிய யாத்திரிகம்

இதன் ஆசிரியர் H. A. கிருஷ்ண பிள்ளை என்பவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் ரெட்டியார்பட்டி என்னுங் கிராமத்தில் 1827-இல் தோன்றி 73 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். வேளாளர் குலத்தில் பிறந்து பின்னர் கிறிஸ்தவராக மாறினர். ஆங்கிலத்தில் (John Bunyan) என்பவர் இயற்றிய "Pilgrim's Progress" என்னும் நூலைத் தழுவி இந்நூலை இயற்றியுள்ளார்.

1. எற்கு - எனக்கு. 2. கரைந்த - சொன்ன. உள்ளம் - மனம். விழைந்து - விரும்பி. நச்சி - விரும்பி. ஈந்த - கொடுத்த. 3. கொடும்பஞ்சம் - பண்புத்தொகை. ஆற்றுனய் - பொறுக்க முடியாதவனாய். நுங்கினன் - சாப்பிட்டான். 4. உற்ற - பொருந்திய. ஆவி - உயிர். சோர்குவல் - வாடுதல். இன்றி - இல்லாமல். 5. புகல் - புகலிடம். புந்தி - புத்தி. உள்ளி—நினைத்து. உளம் - மனம். தாதை - தந்தை. பக்கல் - பக்கம். நைந்தான் - வருந்தியவனாய். 6. ஒல்லையே - விரைவாக. ஈர்க்க - இழுக்க. அல்லல் - துன்பம். உந்த - தள்ள. 7. என் தந்தை என்பதன் மரூஉ எந்தை. நெட்டுயிர்த்து - பெருமூச்சுவிட்டு. புரிந்தனன் - செய்தேன். அபாத்திரன் - தகுதியற்றவன். மதி - புத்தி. 8. உய்யுமாறு - பிழைக்கும்படி. நும்பால் - உங்களிடம். என்னு - என்று சொல்லி. அரற்றி - அழுது. நையல் - வருந்தாதே. அகத்துள் - வீட்டிற்குள். நண்பால் - நேசத்துடன். 9. மரித்தான் - இறந்தான். இன்னே - இப்பொழுதே. தகவு - தகுதி. உவகை - மகிழ்ச்சி. வத்திராதி - ஆடை முதலியவற்றை. கலம் - அணி.

4. மனோன்மணீயம்

இதன் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள். 1855-இல் ஆலப்புழை என்னும் ஊரில் பிறந்தார். ஆங்கிலத்தில் M. A. பட்டம் பெற்றுத் திருவிதாங்கூர் அரசினர் கல்லூரியில் வேலை பார்த்து வந்தார். சிறந்த தமிழ்ப் புலமையுடையவர். இனிய செந்தமிழ் நடையில் இந்நாடக நூலை இயற்றி நாடகத் தமிழுக்குப் புத்துயிர் அளித்தார். சுமார் அறுபது ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருந்தார்.

நல்கும் - கொடுக்கும். ஊண் - உணவு. அலைகடல் - அலைகளையுடைய கடல். பரற்கள் - கூழாங்கற்கள். முன்னீர் - கடல். ஓர்ந்து - நினைத்து. ஆணை - கட்டளை. தூங்கியும் - அசைந்தும். இழிந்தும் - இறங்கியும். பரந்தும் - விரிந்தும். சாடி - மோதி. ஈட்டியது - சேர்த்தது. எழிலி - மேகம். நிரந்தரம் - எப்பொழுதும். (இடைவிடாது)

IV. சிறு நூல்கள்

1. தனிப்பாடல்

ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை அவர்கள். காலம் 19-ஆம் நூற்றுண்டு. ஊர் குளத்தூர். தரங்கம்பாடி மாயூரம் முதலிய இடங்களில் ஜில்லா முன்சீப்பாக இருந்தவர்.

1. கார் - மேகம். வாரி - கடல். வாரி - அள்ளி. 2. முகில் - மேகம். மைவானில் - இருண்ட ஆகாயத்தில். தாண்டு நீ - தாண்டிச் செல்லுகின்ற நீ. மாசு - மேகம்.

2. சுதந்திரம்

இதன் ஆசிரியர், திரு. வி. க. விண்சுடர் - சூரிய சந்திரர்கள் மான்மலை - பெரியமலை. மண்கம்பம் - பூகம்பம். ஒன்னலர் பகைவர்.

3. இளந்தமிழனுக்கு

இதன் ஆசிரியர் தேசியகவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையாவர். இவர் எழுதியுள்ள பாடல்கள் எண்ணிறந்தன. தற்காலக் கவிகளுள் தலைசிறந்தவராவர். இவர் சென்னை அரசியல் அவைக்களப் புலவராக நியமிக்கப்பட்டுள்ளார். அச்சம் - பயம். துச்சம்-அற்பம். எங்கணும் - எல்லா விடங்களிலும்.

V. பல்சுவைப் பகுதி

1. அழகரந்தாதி

அழகரைப் பற்றிய அந்தாதி எனப் பொருள்படும். ஒரு பாட்டின் ஈற்றெழுத்து அல்லது அசை, சீர், அடி ஏதாவதொன்று அடுத்த பாட்டுக்கு முதலாக அமையப் பாடப்படுவது அந்தாதி எனப்படும். திருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டருளிய திருமாலின் பெயர் அழகர். இதன் ஆசிரியர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். திருமங்கை என்னும் ஊரில் பிறந்தவர். கி. பி. 13-ஆம் நூற்றுண்டினர்.

1. சரணாரவிந்தம் - திருவடித்தாமரை. பம்பி - நெருங்கி தேசு எறிக்கும் - ஒளி வீசும். சோலைமலை - திருமாலிருஞ்சோலை. 2. துஞ்சல் உற்ற - உறக்கம் பொருந்திய. இராவணன் - இருள் போன்ற கரிய நிறத்தையுடைய கும்பகருணன். அணன் - அண்ணன். இரா வணம் - இல்லாதவாறு. 3. தந்தை - இனி,

முன்+நூற்றுவர். தத்தை-துன்பத்தை. அத்தை மைந்தர்-அத்தையாகிய குந்தியின் மைந்தர்கள்;பாண்டவர். கழித்தத்தை-போக்கிய வகையை. 4. கால் - காற்று. அம் - நீர். புவனம் - உலகம். உதிரம் - இரத்தம். கால - கக்கும்படி. குமைத்தாய் - அழித்தவனே. காயம் - உடல். கூற்று - இயமன். அமலே - திருமகள், புவி - பூமி. 5. கருளன் - கருடன். கஞ்சன் - கம்சன். நெஞ்சம் - மனம். கூருள் அக்கு - திரண்ட எலும்பு.

2. சிலேடை

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

காளமேகப் புலவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சிலேடை பாடுவதில் வல்லவர். மிக விரைவில் பல பொருள்பற்றி எளிய நடையில் பாடுவதில் சமர்த்தர். ஒரு சொல் அல்லது தொடருக்கு ஒன்றுக்குமேற்பட்ட பொருள் தோன்றப் பாடுவது சிலேடை. இரையும் - பெரு மூச்சுவிடும், ஓசை செய்யும். முகம் - பாம்பினுடைய தலை, பார்ப்பவரது முகம். பிள்+நாக்கு - பிளவுபட்ட நாக்கு. பிண்ணாக்கு.

பாம்பும் வாழைப்பழமும்

நஞ்சு - விஷம், நைந்து. நாதர்முடி - சிவபிரான்தலை. வெஞ்சினம் - கொடிய கோபம். தேன்+பாயும்=தேம்பாயும். வரை - மலை. மீளாது - நீங்காது, திரும்பாது.

3. தேவாரம்

அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் இம்மூவரும் தேவாரம் இயற்றிய பெரியாராவர். இப்பாடலாசிரியர் அப்பர். இவருக்கு வாகீசர் முதலிய வேறு பெயர்கள் உண்டு. பெற்றோர் - புகழனார், மாதினியார். இவரது காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

மாசு - குற்றம். மதியம் - சந்திரன். வீசு தென்றல் - வீசுகின்ற தென்றல் காற்று. எந்தை - என்+தந்தை என்பதன் மரூஉ மொழி.

4. திருவருட்பா

இதன் ஆசிரியர் இராமலிங்க அடிகள். 1823-ஆம் ஆண்டில் சிதம்பரத்தை அடுத்த மருதூரில் தோன்றினர். இராமையா பிள்ளை சின்னம்மையார் என்போர் இவரது பெற்றோராவர். இவரது பாடல்கள் எளிமையும் சமரச நோக்கமும் கொண்டவை.

அச்சம் - பயம். ஒருவிய - நீங்கிய. அம்பலம் - ஞான சபை. இச்சை - விருப்பம். காண் - முன்னிலையசை. எந்தை என்பதன் விளி எந்தாய்.